10. இவ்வருஷம் துவக்கத்திலிருந்த நிலைமை இப்படி. Mr. ரூஸ்வெல்டின் புதுமுறையை (New Deal) ஆதரிக்காத, தனித்திருப்பவர்கள், மத்திய பிரதேச விவசாயிகள், அரசியல் பிரமுகர்கள், கைத்தொழில்தலைவர்கள், அமெரிக்கா விலுள்ள ஜெர்மானியர், இதாலியர்கள், 'ஐந்தாம் படை'யின் சூழ்ச்சியில் அகப் பட்டுக்கொண்டவர்கள், எல்லோரும் சேர்ந்து கூச்சல் போடத் தொடங்கினார்கள். அதாவது, "ரூஸ்வெல்டை மூன்றும் முறை தேர்ந்தெடுத்தீர்களானால் வந்துவிடும் ஆபத்து. ஐரோப்பியச் சண்டையில் மாட்டிக்கொண்டு விடுவோம்; ஊரான் வீட்டுப் பிள்ளையைக் கிணற்றில் விட்டு ஆழம் பார்ப்பதுபோல், பிரிடிஷ்காரர் நம்மை உப யோகப்படுத்திவிடுவார்கள்; தோற்கும் குருவியைத் தழுவினவராவோம். (அதுவும் தங்கள் கண்கள் முன்பாக ஜெர்மனி வெற்றிகளடைந்து கடைசியாக பிரிடனின் முக்கியத்துணையான பிரான்ஸூம் படுத்துப்போகவுமே இந்த யுத்தம் எப்படி முடிவடையப் போகிறதென்பதில் அவர்களுக்குப் பெரிய சந்தேகம் கிளம்பி விட்டது.) ஜனநாயகமுறையை அனுசரித்து வோட்டு செய்யுங்கள், ஐரோப்பியச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ளாதீர்கள். 'புது முறை' கையாடுவதாகக்சொல்லிக் கொண்டு மூன்றும் முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு தன்னரசு நாடாக ஆட்சி புரிய வேண்டுமென்ற எண்ணங்கொண்ட இந்த ரூஸ்வெல்டை வைக்கவேண்டிய இடத்தில் வையுங்கள்" என்று பலவாறாக ஓலமிட்டார்கள்.

11. இதிலிருந்து Mr. ரூஸ்வெல்ட் எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறதென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். கொஞ்சங் கொஞ்சமாக விஷயங்கள் அமெரிக்கர்கள் மனத்தில் பட்டன. அதாவது, ஹிட்லர் வெர்ஸயில்ஸ் (Versailles) சமாதான உடன்படிக்கையை மாற்றுவதோடும் மட்டுமில்லாமல், ஜெர்மனியை ஐரோப்பா கண்டமளாவியதாகச் செய்யவேணு மென்ற நோக்கம் கொண்டிருக்கிறார்; ஜனநாயக ஆட்சியென்பது ஒரு அழுகல் மாங்காய் என்பது அவர் துணிபு; பொய், புனைசுருட்டு, சொன்னவார்த்தையை மறுதளிப்பது, பட்டினி போடுவது, சித்திரவதை செய்வது, போர்புரியாதவர்

பேரிலும் குண்டு போடுவது, குடும்பம் குடும்பமாக வேண்டாதவர்களை தேசப்ரஷ்டம் செய்விக்கிறது, சாத்வீக ஜனங்களை அடியோடு அழித்துவிடுவது என்பதெல்லாம், நாஸிகள் கைக்கொண்ட அரசியல் முறையை சாதிப்பதற்குக் கருவிகள் என்று அமெரிக்கர்கள் மனதில் பட்டபின்னும், ரூஸ்வெல்டும் அவர் மந்திரிசபையும் வெகு ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ள வேண்டியதாகவிருந்தது. ஜாக்கிரதையாகப் பேசவேண்டியதாக இருந்தது. உலகத்தில் பிரமுகர்கள் யுத்தத்தைப் பற்றி அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள்; அவைகளில் ஐக்கியமாகாணத் தலைவர் சொன்னவை மற்றெல்லாவற்றைக்காட்டிலும் அழகாயிருந்திருக்கலாம். அவர் ஹிட்லர், முஸோலினியை நிர்தாக்ஷண்யமாகக் கண்டித்துப் பேசியிருக்கலாம், அவர்கள் கொடுமையால் வருந்துகிற தேசத்தவரிடம் மனப்பூர்வமான அனுதாபம் காட்டியிருக்கலாம், போர்முனையின் முன்னணியில் நிற்பவர்களுக்கு உற்சாகமுண்டாகும்படி பேசியிருக்கலாம், ஆயினும் இவ்வளவு பேச்சிலும் அமெரிக்க சைன்யங்கள் கடலைத்தாண்டி ஐரோப்பாவில் யுத்தத்தில் கலந்துகொள்ள அனுப்பப்படும் என்று ஒரு வார்த்தைகூடக் காணோம். எதிர்காலத்தில் வரப்போகிற விஷயங்களுக்கு அவ்வளவு ஆதிக்கம், அதாவது, அக்டோபர் மாதம் நடக்கப்போகிற தேர்தலின் வேகம்தான் இத்தகைய மனோபாவத்திற்குக் காரணம்!

காற்றுத் திரும்பிவிட்டது.

12. நல்ல வேளையாக, தேர்தல் கொள்கைகளையும் அதிக்ரமித்துப் போய்விட்டது நடந்திருக்கும் சம்பவங்கள். ஜெர்மானியர்களே தங்கள் நடவடிக்கைகளால் ஒரு பெரிய தேசத்தாரைத் தங்கள் விரோதிகளாகச் செய்துவிட்டார்கள். ஐக்கிய தேசத்தாருக்கு நேச தேசத்தாரிடமுள்ள அனுதாபம் பேச்சோடு மட்டுமல்லவென்று முன்னமேயே சொன்னேன். ஒவ்வொரு மாதமும், ஜயத்தின் பயனாக ஜெர்மானியரின் ஆதிக்கம் அதிகரிக்கவே, Mr. ரூஸ்வெல்ட் நடுநிலைமையிலிருந்து நழுவினதும், நேச தேசத்தாருக்கு சாதகமானதுமான சட்ட திட்டங்கள் ஏற்படுத்தினார். பெயருக்கு மட்டில், தேச காபந்திற்காகச் செய்வதாக சொல்லப்பட்டது. அமெரிக்கா சைன்யங்களை வெளியேற்றி அயல் நாடுகளுக்கு அனுப்புவது அசாத்தியமென்பது கொஞ்சம் அழுத்தம் திருத்தமாகவே சொல்லப்பட்டது. ஆயினும், காபந்திற்காகவென்று சொன்னது கபடமல்ல. ஹிட்லருடைய ஆசை ஐரோப்பா அளவிற்குமட்டுமில்லையென்பது புத்திசாலிகளுக்கு ஸ்பஷ்டமாகத் தெரியும். ஹிட்லரின் புது உலக முறையால் ஐரோப்பாவிற்குமட்டுமில்லை ஆபத்து, அமெரிக்காவையும் அது தாக்கும், காலம், தூரம் முதலியவைகள் முன்போலல்லாமல் மாறிவிட்டன, தென் அமெரிக்க நாடுகளில் ஜெர்மானியர் தலையிட்டுக்கொண்டு வேலைசெய்யக் கிளம்பிவிட்டார்கள் என்ற காரணங்களால், ஜனநாயக நாடுகளிலும் சரி, குடியரசு நாடுகளிலும் சரி, ஜனநாயக தேவதை நடுக்கமெடுத்து உளர ஆரம்பித்துவிட்டது.

13. இந்தக் காரணத்தால், அமெரிக்காவில் சில காரியங்கள் செய்ய ஆரம்பித்தார்கள். அவைகள் பிரிடனுக்கு ரொம்ப ஆறுதலைக் கொடுத்தன; ஹிட்லருக்கு பீதியைக் கொடுத்தன. ஹிட்லரும் நடுங்கிப்போய், இங்கிலாந்தை விரைவில் படை

எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய நேர்ந்தது. உதாரணமாக, வெளிநாடுகளுக்கு ஆயுதங்கள், யுத்த தளவாடங்கள் அனுப்புவதைத் தடுத்திருந்த நடுநிலைமை சட்டம் ரத்து செய்யப்பட்டது. பெயரளவிற்கு எல்லோர் சார்பாகவுந்தான் மாற்றப்பட்டது. ஆனால் கவனித்துப் பாருங்கள், ரொக்கம் கொடுத்துத் தான் சாமான்கள் வாங்கவேணும் என்ற நிபந்தனை நடைமுதலில் இங்கிலாந்திற்குத்தான் பிரயோஜனமாகும். ஜெர்மனியில் வியாபாரக் கப்பல்களும், பணநிலையுமிருக்கும் ஸ்திதியில், ஜெர்மனிக்கு எள்ளளவும் பிரயோஜனப்படமாட்டாது. அதன்பிறகு Mr. கார்டல் ஹல், தென் அமெரிக்காவிற்குச்சென்று லீமா(Lima)வில் நடந்த சபையில் 'மன்ரூ கொள்கை' (Munroe Doctrine)யை ஞாபகமூட்டி, ஐரோப்பிய தேசத்தவர் எவரும் அமெரிக்கா விஷயங்களில் தலையிடக்கூடாதென்று கண்டோக்தமாக எச்சரித்தார். (எந்த ஐரோப்பிய தேசத்தைக் குறித்தாரென்பது வெட்ட வெளிச்சமாக இருக்கிறது!). பின்னும், ஹிட்லர் ஸ்காண்டிநேவியாவில் (Scandinavia) அமளி செய்துகொண்டிருக்கும்போது, அமெரிக்கர்கள் ஒரு பெரிய யுக்திவாதம் செய்தார்கள். அதாவது, க்ரீன்லண்டு (Greenland) அமெரிக்கா கண்டத்திலிருக்கிறதென்பதை ஞாபகமூட்டினார்கள். இதை எல்லோரும் கொஞ்சம் மறந்திருந்தார்கள். இம்மாதிரி ஞாபகமூட்டினதின் அர்த்தம் என்னவென்றால், அந்த மாகாணமும் மன்ரூ கொள்கைக்கு உட்பட்டதென்பது. இப்படிச் செய்தது ஹிட்லர், முஸோலினிக்குப் பிரதிகூலம்.

14. இம்மாதிரியான பிரகடனங்கள் மட்டும்தான் காலத்தின் சின்னங்களென்றில்லை. துப்புவேலைகளை எதிர்த்து வேலை; பிரிடனிலிருந்து தளவாடங்கள் வாங்கவந்தவர்களுக்கு வரவேற்பு; அவர்கள் வேண்டுகோளிற்கிணங்கி தளவாடத் தயாரிப்பைத் துரிதப்படுத்துவது; தனித்திருத்தல் என்ற கொள்கையை எதிர்ப்பது; தரைப்படை, கப்பல்படை, ஆகாயப்படை இவைகளை அதிகப்படுத்த மதிமயங்கும்படியான பெருந்தொகைகள் செலவுசெய்ய திட்டங்கள் ஏற்படுத்துவது; ஐரோப்பா கண்டத்தார் எல்லோரையுமே தயார் செய்தாலெப்படியோ, அந்த அளவிற்கு ஏராளமான ஜனங்களை பட்டாளத்தில் சேர்த்துத் தயாரிக்க ஏற்பாடு, இவைகளெல்லாம் பாதுகாப்பிற்கென்ற பெயரைவைத்து செய்யப்பட்டன.

ஒரே ஊக்கம்.

15. வேலை மும்மரம். இங்கிலாந்திற்காக வாங்கப்பட்ட ஆகாயவிமானங்கள் கப்பலில் ஏற்றி அனுப்புவதானால் தாமதம் ஏற்படும். விமானங்களை அமெரிக்க விமானிகள் ஆகாயமார்க்கம் கொண்டுபோவதென்றால் நடுநிலைமை தவறினதாகும். என்ன தொல்லை! அதற்காக எடுத்தார்கள் யுக்தி. விமானங்களை கனடா (Canada) விற்கு தள்ளிக்கொண்டுபோய் விட்டு, அங்கிருந்து யுத்தம் செய்பவர்களைக்கொண்டு பறந்துகொண்டுபோகச் செய்தார்கள்! மனமிருந்தால் வழியுண்டு; இந்த சம்பவத்திற்குப் பிறகு அமெரிக்கரின் மனோபாவம் எப்படியென்பதில் யாருக்குத்தான் சந்தேகம்!

16. அடுத்தபடியாக, அமெரிக்கா, கனடா பட்டாள நிபுணர்கள் ஒன்றுகூடி பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களை ஆலோசிக்க ஆரம்பித்தார்கள். இதன்

பயஞக ஒரு அத்தியாச்சரியமான பேரம் நடந்தது. யுத்தக்கப்பல்கள் இங்கிலாந்திற்குத் தேவையாகவிருந்தது. பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த சில முக்கிய ஸ்தலங்களை ஒப்படைத்து அதற்குப் பிரதிப் பிரயோஜனமாக 50 யுத்தக் கப்பல்கள் பிரிடன் (Britain) வாங்கிக்கொண்டது.

17. அதன் பயன் என்ன ? பிரெஸிடெண்ட் (President) ஸ்தானத்திற்குத் தேர்தல் நெருங்குகிறது. Mr. ரூஸ்வெல்ட் நடுநிலைமையிலில்லை, பிரிடனுக்கு சார்பாக தன் தேசத்தை யுத்தத்தில் மாட்டிவிடப் பார்க்கிருர் என்ற காரணத்தால் அவரை எதிர்ப்பதற்காகப் பொருக்கப்பட்ட பேர்வழி எதிர்க்கமாட்டேன் என்கிருர். காரணமென்ன ? Mr. ரூஸ்வெல்ட் நடுநிலைமையிலிருந்து நழுவியிருக் கிறது போதாது, இன்னும் ஊக்கமாக அவர் இருக்கவேணும் என்ற காரணம்! ஹிட்லர் அமெரிக்காவிற்கு செய்ய எண்ணின வேலைக்கு அவர் கண்ட பலன் இதுதான்!

18. இதெல்லாம் உங்களை திருப்திப் படுத்தலாம். திருப்திப்படுத்த வேண்டியது நியாயமே. ஆயினும், நிலையோ நெருக்கடியாகவிருக்கிறது, தாமதித்தால் கேடு விளையும், என்றிருக்கிற இச்சமயத்தில், இங்கிலாந்து பக்கம் மனம் இவ்வளவு சாய்ந்திருக்க, என் ஐக்கிய தேசத்தார் பிரத்யக்ஷமாக சைன்யங்கள் இங்கிலாந்தின் சகாயத்திற்கு அனுப்பவில்லையென்று நீங்கள் கேட்கலாம்.

உண்மையில் என்ன அப்யந்தரம்.

19. அமெரிக்கர்கள் இப்படி இருப்பானேன் என்ருல், உண்மையான காரணத்தைச் சொன்னுல் அசம்பாவிதமாகக் கூடத்தோன்றலாம். காரணம் உண்மையில் இதுதான். ஹிட்லர் தன் யந்திர பலங்கொண்ட சைன்யங்களைக் கதியற்ற போலண்டின் பேரில் தாக்கின சமயம், தற்கால முறையில் போர் புரிவதற்கு அமெரிக்கா இங்கிலாந்தின் அளவிற்குக்கூடத் தயாராகவில்லை. சமாதானம், சமாதானம் என்று பல வருஷங்கள் போக்கியும், ஐரோப்பாவிலிருந்து வெகுதூரத்தில் இருப்பதால் பயமில்லையென்று தங்களையே ஏமாற்றிக்கொண்டும், யுத்தத்தில் நாம் புகுவதற்குமுன் நமது 'பயங்காளித்தனத்தை'யும், நாம் பல சந்தர்ப்பங்களில் 'மதிப்பிழந்ததையும்' நாம் ஹிட்லர் வகையரா பேர்வழிகள் வார்த்தை சுத்தர்களென்று நம்பி செய்துகொண்ட உடன்படிக்கைகளையும், அந்தக் கொடுஞ் சர்ப்பத்தின் கொடுமையை சரிவர அறியாததால் ஏமார்ந்து மோசம்போனதையும் பற்றி, அமெரிக்க ஜனங்களும் பத்திரிகைகளும் இகழ்ந்து பேசினுர்கள். மேலும், நமது அந்நிய தேசங்கள் சம்பந்தமான கொள்கைகள் சீன, பஸிபிக் சமுத்திரத் தீவுகள் முதலிய பிரதேசங்களின் சம்பந்தமாக அவர்களுக்குள்ள நோக்கங்களுக்கு இடையூருக இருந்த காலங்களில் ரொம்பவும் இகழ்ச்சியாகப் பேசினுர்கள். ஆனுல் அவர்களிருந்ததாகச் சொல்லப்படும் ஸ்திதியில் நம்மைப் போன்ற சமாதானத்தில் ஆசையுள்ள ஜனங்கள் என்ன செய்திருப்பார்கள் என்று யோசித்துப் பாருங்கள். அமெரிக்கர்கள் உண்மை நிலைமையைப்பற்றி ஒரு அமெரிக்கப் பத்திரிகை நிருபர் எழுதியிருக்கிறதைக் கேளுங்கள்.

20. "சரித்திரத்தில் இந்த மாதிரி ஆச்சரியம் கேட்டதேயில்லை. புசலிற்கு பயந்து உள்ளே புகுந்து, பின்னால் ஆட்டமெடுத்துப்போய் வெளியே மறுபடி வந்து ரூஸ்வெல்டுக்கு 'வோட்' கொடுத்து,......அதிவிரைவில் யுத்த மூஸ்தீபுகள் தயார் செய்ய பூரண அதிகாரம் கொடுத்தும்,......'தனித்திருத்தலா, என்ன பேதமை'யென்று முறையிட்டும், அபேதவாதிகளும், ஐந்தாம்படைக்காரர்களும், என்ன கேடுகெட்டாலும் தனித்திருத்தலே சரியென்பவர்களும், Mr. ஹர்ஸ்ட் ஆகிய எல்லோரும் கதம்பமாகக் கலந்து "யுத்தத்தில் சேராதீர்கள்" என்று ஓலமிடுகிறார்கள். ஆனால், இந்த ஆரவாரத்தை யாரும் காதில் வாங்கிக்கொள்ளுகிறதில்லை. அமெரிக்கர்கள் போருக்கென்று கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜெக்கோஸ்லோவேகியாவைப் படையெடுத்து அழித்த பின் எப்படி இங்கிலாந்து யுத்தத்திற்கு ஆயத்தமாயிற்றோ, அவ்விதமே அமெரிக்கா ஆயத்தமாகிவிட்டது. அழகாய் வெகுகாலம் தூங்கிவிட்டு, ஆபத்து அதிகரித்த சமயம் இங்கிலாந்து விழித்துக்கொண்டது. அமெரிக்கர்கள் நல்ல தூக்கம் போட்டுவிட்டு விழித்துக்கொண்டார்கள். ஜெர்மானிய தீவிர யுத்த காரியங்களால் எழுப்பப்பட்டுப் பார்க்கையில், நாஸிகள் 6 வருஷமாக யுத்தத்திற்குத் தயாராகியிருக்கிறார்கள், 24,000 யுத்த விமானங்கள் வைத்திருக்கிறார்கள் என்ற ஸ்மரணையும் வந்தது!"

21. ஏன் அப்படி? ஐக்கிய மாகாணங்களின் சைன்ய பலம் 4,91,000 பெயர்கள். தேச காவலாளிகள் என்ற 2,51,000 இதற்குள்ளடங்கியது. ஒரு கண்டத்தில் பாதிபாகமாகிய தேசத்திற்கு இது ரொம்ப சொற்ப சைன்யம். அவர்களில் 73,000 பெயர்கள் மட்டும் தற்கால யுத்தத்திற்குத் தக்கபடி முஸ்தீபுகள் உடையவர்கள். ஐக்கிய மாகாண ஜனத்தொகையில் நாலில் ஒரு பாகம் ஜெர்மானிய ரத்தசம்பந்தமுள்ளவர்களென்றால், ஐந்தாம் படையை அடக்கிவைக்க இந்த சைன்யம் எந்த மூலை!

22. தேச பாதுகாப்பைப்பற்றிப் பேசுங்கால், 'கோனி தீவு' என்ற சொற்ப பூமியைப் பாதுகாக்கவேண்டிய அளவிற்குக்கூட விமானங்களை எதிர்க்கும் பீரங்கிகள் ஐக்கியமாகாணம் முழுவதிலுமேயே இல்லையென்று லாகார்டியாவின் மேயர் சொன்னார்.

23. நியூயார்க்கில் பத்துப்பெயர்களுள் ஒருவருக்குத்தான் விஷக்காற்று பாதுகாப்பு மூடிகளிருக்கிறதென்றும், அவைகளில் நூற்றிற்கு 90 வரை பழக்கம் செய்துகொள்ளுவதற்குத்தான், காரியத்திற்குதவாது என்று மேஜர்-ஜெனரல் ஹாஸ்கெல் சொன்னார்.

24. ஆகாய விமானங்கள் சம்பந்தமாகவும் இதே கதைதான். ஜூன் மாதத்தில் அமெரிக்காவில் 3,500, விமானங்கள் தானிருந்தன. பழக்கத்திற்காக உள்ள விமானங்கள் சேர்த்து இந்த சங்கியை. இது பிரான்ஸ் தோல்வியடைந்த பின் நாம் ஜெர்மானிய விமானங்களை அழித்த சங்கியைக்குக் குறைவானது,

2

25. அமெரிக்க கப்பற்படை இங்கிலாந்திற்கு அடுத்தபடியாகவுள்ளது என்பது நிஜம். ஆயினும் அது பசிபிக் மகாசமுத்திரம் முழுமையும் காபந்து செய்யவேண்டிய பொறுப்புள்ளது.

26. இவைகளெல்லாம் கவனிக்க "போர்புரிவது" என்பது நீங்கலாக மற்றபடி வேண்டிய உதவியைச் செய்வதாக அமெரிக்க அரசியல் வாதிகள் ஜாக்கிரதையாக வாக்குறுதி கொடுத்தார்களென்றால் ஆச்சரியமல்ல.

கிழக்கு வெளுக்கிறது.

27. ஆனால் அந்த கதை இப்பொழுது மாறிவிட்டது. நாளுக்குநாள் மேற்கொண்டும் மாறிவருகிறது. தேர்ந்தெடுக்கட்டும், எடுக்காமலிருக்கட்டும், ஒன்றும் அசாத்தியமில்லை. கடல்தாண்டி சைன்யங்கள் அனுப்புகிறதில்லையென்று அமெரிக்க அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆனால், கப்பற்படை அனுப்புகிறது இல்லையென்றாவது, விமானப்படை அனுப்புகிறதில்லையென்றாவது சொல்லுகிறார்களில்லை. ஞாபகத்திற் கெட்டியகாலமாக பிரிடனுக்கு அமெரிக்கர்கள் சார்பாக இருந்ததற்குமேல் இப்போது பிரிடனுக்கு சார்பாகவிருக்கிறார்கள். பாதுகாப்பிற்காக யுத்த தளவாடங்கள், கப்பல் கட்டுவது, படை சேர்ப்பது முதலியவைகளுக்காக ஏற்பாடு நடப்பதுடன், இதற்காகவென்று 1,67,000 கைத்தொழிற் சாலைகள், 8,000,000 விவசாயிகள் பண்ணைகள், நாளொன்றுக்குப் பத்து லக்ஷம் பீப்பாய் எண்ணெய், சாதாரண நாளிலேயே பாதி வேலைக்குமேல் கொஞ்சம் வேலை செய்து, இருபது லக்ஷம் டன் சாமான்கள் விற்பனைசெய்யும் சக்தியுள்ள இரும்பு வேலை, இவைகளெல்லாம் சன்னத்தமாயிருக்கின்றன. இம்மாதிரி கணக்கிடவொண்ணாத செயலுள்ளவர்கள் நியாயக் கக்ஷியில் சேர்ந்தால், அவர்கள் சிநேகத்தால் ஏற்படும் பயனைக் கணக்கிடமுடியாது—அவர்கள் விரோதத்தால், விளையக்கூடிய வினைக்கும் அளவில்லை.

28. இன்னும் கொஞ்சம் காலம் வேண்டியிருக்கிறதென்பது உண்மை. அமெரிக்கர்களுக்கு இப்போதுதான் உணர்ச்சி வலுக்க ஆரம்பித்திருக்கிறது. பிரிடன் இன்னும் கொஞ்ச காலம் பல்லைக்கடித்துக்கொண்டு பிடியை விடாமல் இருக்கவேண்டியதுதான். (அப்படி பிரிடன் பிடியை விடாதென்று யாருக்குத்தான் நம்பிக்கையில்லை?) சில வருஷங்களுக்குமுன் ஹிட்லரைச் சந்தித்தகாலத்தில் Miss டாரதி தாம்ஸன் சொன்ன பெயர்போன வாசகமான "ஏ அடால்ப், உனக்குக் கெட்டகாலம் நெருங்கிவிட்டது, அப்பா" என்பதை ஞாபகமூட்டிக் கொள்ளுவது பொருத்தமாகும்.

அனுபந்தம் I.

புது உலகம்.

காட்டு மிருகங்கள் கூட்டம் கூட்டமாய் வேட்டையாடிக் காட்டைப் பங்கிட்டுக்கொள்வதுபோல், ஜெர்மனியும், இதாலியும், ஜப்பானும் உலகத்தைப் பங்குபோட்டுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். இந்தக் கொள்ளை நிலைத்துவிடுமென்ற உத்தேசம்போலிருக்கிறது. 'அமெரிக்கா கண்டம் அமெரிக்கர்களுக்கே, எங்களுக்கு வேண்டாம்' என்று இந்த தேசங்கள் அன்புகூர்ந்து சொல்லுவதுபோல், பாசாங்குசெய்து பேசுகின்றன. மனதுக்குள் அமெரிக்காவைக்கண்டு பயப்படுகின்றன. அமெரிக்க நாடுகளில் இந்த தேசங்கள் மேல் விரோதம் அதிகப்பட்டுக்கொண்டுவருகிறது. மேலும் ஜெர்மனி பிறருக்குச் செய்த துரோகங்களை அமெரிக்கா எளிதில் மறக்காது. இரண்டு வருஷங்களுக்கு முன் அபயம் கொடுத்த ஸெக் தேசத்தைச் சென்ற வருஷம் பிடித்தாய்விட்டது. அதற்கு முன் வாக்குக்கொடுத்த போலண்டும் போய்விட்டது. அமெரிக்காவைப் பிடிக்கும் உத்தேசமில்லையென்று சர்க்கரை போட்டாற்போல் இப்பொழுது பேசப்படுகிறது.

உலகத்தில் கடலிருப்பதும், நிலத்தைவிட கடல் அதிகமாய் இருப்பதும் ஹிட்லருக்கும், முஸோலினிக்கும் பிடிக்கவேயில்லை. கடலில் காலெடுத்து வைக்கப் பயப்படுகிறார்கள். இங்கிலீஷ் கால்வாய் வெகு சிறு கடல். இதைத் தாண்டக்கூட ஜெர்மன் சைன்யங்கள் பயப்படுகின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸ், பிரிடிஷ் ஸாம்ராஜ்ய நாடுகள் கப்பல் படைகள் கூடிய பிரிடிஷ் கப்பல் படை, சென்ற வருஷத்தைக்காட்டிலும் அதிகம்; நன்றாய் பலப்பட்டுவிட்டது. சரித்திரத்திலேயே கேள்விப்படாத பெரிய கப்பல் படையை, அமெரிக்கா தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதாலிய கப்பல் படையோ காரியத்துக்கு உபயோகப்படவில்லை. ஜப்பான் கப்பல் படையாவது உதவிக்குக் கிடைக்காதாவென்று ஹிட்லர் ஆசைப்படுகிறார்.

ஜெர்மனியின் கிழ்ப்பக்கத்தில் ரஷியா முட்டுக்கட்டை போட்டாற்போல் நிற்கிறது. அந்தத் தேசத்தின் ஜனத்தொகை 1,800 லக்ஷம். ரஷியாவின் தலைவருக்கு ஜெர்மனியோடு அல்லது ஜப்பானோடு சண்டை செய்யும் எண்ணம் கிடையாது. பிறர் சண்டைபோடும்போது தான் அகப்பட்டதைச் சுருட்டும் உத்தேசத்தோடிக்கிறார். ஜப்பான் உடன்படிக்கையிலிருந்து ரஷ்யா வம்பு செய்யாதென்று ஜெர்மனி நினைக்கலாம். ஏற்கனவே ரஷியாவானது, ஜெர்மனியிடத்திலிருந்து பால்டிக்கைப் பிடுங்கிக்கொண்டுவிட்டது; வாக்களித்தபடி யுத்த சாமான்கள் சரிவர அனுப்பவில்லை. இவைகளை யோசிக்கும்போது ஜெர்மனி சொன்னபடி ரஷியா ஆடாதென்று தோன்றுகிறது. நெபோலியன் கதி, தனக்கு வரக்கூடாதென்று ஹிட்லர் எண்ணுவதாக ஒரு ஜெர்மன் பத்திரிகை சொல்லுகிறது. எந்த எண்ணங்களையும் எண்ணுவது எளிது. நெபோலியனும் ஜயிக்கத்தான் நினைத்தான். முடிவில் தோல்வியடைந்தான்.

அக்காலத்தில் பிரிடனைப் பட்டினிபோட்டு, கழுத்தைத் திருகிவிடவேண்டும் என்று நெபோலியன் 'பூகண்ட ஏற்பாடு' (Continental system) என்று பெயரை வைத்து, ஐரோப்பிய நாடுகளை பிரிடனுக்கு விரோதமாக ஒன்று சேர்க்கப் பார்த்தான். அதேமாதிரி 'புது—உலக—ஸ்தாபனம்' என்று சொல்லிக்கொண்டு இப்பொழுது ஹிட்லர் தேசங்களைச் சேர்க்கப்பார்க்கிருர். தன் விரலால் சுட்டிக் காட்டிய அளவிலேயே ஆபிரிக்கா கண்டம் முழுவதும் தன் கைவசப்பட்டுவிடும் என்று எண்ணுகிருர். ஆபிரிக்கர்கள் மனிதர்களுக்குக் கீழ்ப்பட்ட வர்க்கமென்று இழிவாய்ப் பேசுவது இவருக்குப் பிடித்தகாரியம். தேசங்களை லஞ்சம் கொடுத்து படையெடுப்பதாயும், பிரிடனைச் சும்மா இருக்கச்சொல்லி பயமுறுத்திப்பார்த் தாய்விட்டது. பிரிடன் அதற்கெல்லாம் இணங்காமல், ஆபிரிக்கா அபகரிக்கப் படாமல் குறுக்கே நின்று பாதுகாத்துவருகிறது. பூமியைப் பங்கிட்டுக்கொள்ளும் ஒப்பந்தத்தில், அரேபியாவைப்பற்றியாவது, நடு—கீழ் பிரதேசத்தைப்பற்றியாவது பிரஸ்தாபம் ஒன்றையும் காணேம். இவர்கள் படித்த பூகோள பாடத்தில் இந்தத் தேசங்கள் விட்டுப்போய்விட்டால்போலிருக்கிறது. முஸ்லிம்களைக் காப் பாற்றுவதாக துண்டுப்பத்திரிகைகள் போடுவதைத்தவிர வேறு ஒரு காரியமும் இதாலிக்கு இந்த ஒப்பந்தத்தில் இல்லை. பலமாதங்களாக ரேடியோ மூலமாய் இந்தியாவின் அபிமானத்தைக்கோரிவந்த ஜெர்மனி இப்பொழுது இந்த ஒப்பந் தத்தில் இந்தியாவைப்பற்றிப் பிரஸ்தாபிக்கக்காணேம். புது உலக அமைப்பில் ஆசியாகண்டத்தின் தலைமை ஜப்பானுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எவர்கள் தன்னேடு சேர்வார்கள் என்று ஜெர்மனி ஒவ்வொரு தேசமாய்க் கேட்டுக்கொண்டு போகிறது. இதற்காகப் புதிய உலகங்களையும் சிருஷ்டிக்கிறது. இதெல்லாம் பிரிடனுடைய பலத்தைக்கண்டு பயப்பட்டு, திகைத்துச் செய்யும் காரியமாகும். இதிலிருந்து இந்தியாவும் ஒற்றுமைப்பட்டு, அதனல் ஏற்படும் பலத்தோடு இந்த அரட்டல்களை எதிர்க்கவேண்டுமென்பது தெளிவாகிறது.

அனுபந்தம் II.

யுத்தக்குறிப்புகள்.

பிரிடன் இனிப்படையெடுக்கப்படுமா ?

படையெடுக்கப்படாதென்பதுதான் ஸர்வஜன அபிப்பிராயம். இதற்கு அறிகுறியாக ஜெர்மனியும் ஐரோப்பாவின் மற்ருெரு பாகத்துக்குச் சண்டையை மாற்றிக்கொண்டு போவதாகச் செய்திகள் வருகின்றன. ஆனல் இதிலிருந்து பிரிடன்மேல் படை யெடுப்பு நின்றுவிட்டதாகச் சொல்லுவதற்கு மில்லை. சானல் (Channel) அக்கரையில் கப்பல்களும், யுத்த தளவாடங்களும் வருவது இன்னும் நிற்கவில்லை. அவைகளை அடியோடு அழித்த பிறகுதான் படை யெடுப்பு நின்றதாகச் சொல்லலாம். யமனைவிட அதிகமாகச் சர்ச்சிலைக் கண்டு ஹிட்லர் பயப்படுகிருர். சர்ச்சிலுக்கு நடப்பு விவரங்கள் நன்ருய்த் தெரியும். அவர்கூட படை யெடுப்பு இனி இல்லையென்று நினைத்து அசிரத்தை

யாய் இருக்கக்கூடாதென்று எச்சரிக்கை செய்திருக்கிறுர். படையெடுப்பைத் தடுத்துவிட்டால் உலகமே இதுவரையில் பாராத மகத்தான வெற்றி நமக்குவரும். அதுவரை, ஜெர்மன் விமானங்கள்வந்து சில்லரை உபத்திரவங்களைச் செய்து வரலாம். அவைகளை நம்முடைய தற்காப்புப் படைகள் விரட்டிவரும். இதிலிருந்தும் ஒரு நன்மையும் பிறக்கும். ஒவ்வொரு நாளும் எதிரி விமானங் களோடு போர் செய்வதிலிருந்து நமது தற்காப்பு விமானங்களுக்கு நல்ல பழக்கமும் தேர்ச்சியுமேற்படும். இப்பொழுது பிரிடிஷ் துறைமுகங்களில் கப்பல்களும், தொழிற் சாலைகளில் விமானங்களும் வெகுவிரைவாய்க் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வேலை முடிந்தவுடன் ஜெர்மனிமேல் பிரிடன் படை யெடுக்கும்.

* * *

ஒப்பந்தங்கள் இன்னும் எத்தனையோ ?

நம்முடைய சத்துருக்களுக்கு ஒப்பந்தங்கள் செய்யும் பயித்தியம் பலமாய்ப் பிடித்திருக்கிறது. இவர்கள் உடன்படிக்கைகளைக் கிழிப்பதில் (ரத்து செய்வதில்) வெகுநிபுணர்கள். அவைகளைவிட ஒப்பந்தங்களை வெகு சுலபமாய் கிழித்து விடலாம்.

இப்போது செய்துகொண்டிருக்கும் (ஜெர்மன்—இதாலிய—ஜப்பானிய) ஒப்பந்தம் யுனைடெட் ஸ்டேட்ஸை பயமுறுத்தச் செய்த காரியம். ஆனால், இதை அமெரிக்கா சாரமற்றதென்றும், உபயோகமற்றதென்றும் தள்ளிவிட்டது. பர்மா ரஸ்தாவை பிரிடன் திறக்கப்போவதிலிருந்தும், இரும்பு சேதாரத்தை யும், கோதுமையையும் ஏற்றுமதிசெய்வதை அமெரிக்கா நிறுத்திவிட்டதிலிருந்தும் ஜப்பானுக்கு ஒப்பந்தத்தில் ஸ்வாரஸ்யம் குறைந்துவிட்டது.

இந்த ஒப்பந்தத்திலிருந்து சில விஷயங்கள் வெளிப்படுகின்றன.

முதலாவது.—இவ்வொப்பந்தப்படி, ஸ்வதந்திர நாடுகள் ஒரு பக்கமும், சர்வாதிகார நாடுகள் மற்றொரு பக்கமும் பிரிந்து நிற்கின்றன. ஆகவே இந்த யுத்தம் பொறுப்பாக்ஷிக்கும், பொறுப்பற்ற ஆக்ஷிக்கும் ஏற்பட்ட சண்டையாய் விட்டது. பொறுப்பாக்ஷிக்கு சக்தியுண்டு, அதிலிருந்து அபிவிருத்தி ஏற்படும்.

பொறுப்பற்ற ஆக்ஷி பிணம்போலாகும்; அதனால் அபிவிருத்தி உண்டாகாது.

இரண்டாவது.—ஜப்பானுக்கு சைனாவில் ஏற்பட்ட தோல்வியையும், ஜெர்மனிக்கு இங்கிலாந்தில் ஏற்பட்ட தோல்வியையும் மறைத்து, உலகத்தை ஏமாற்றுவதற்காகவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

மூன்றாவது.—பிரிடன் என்ற தீவுக் கோட்டையைப் பிடிக்க முடியாது, ஏங்கி, வெறிபிடித்து, ஜெர்மனி புது நேயர்களைத் தேடித்திரிகிறது.

நான்காவது.—இவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்ட ஆர்பாட்டத்திலிருந்து, அதன் முடிவாக, ஓசைப்படாமல் பிரிடனுக்கும் அமெரிக்காவுக்கும் நட்பு பலப்பட்டுவிட்டது.

* * *

பால்கன் கோழிச்சண்டை.

பால்கனில் யுத்தச் சின்னங்கள் காணப்படுகின்றன. மின்னல் வேகத்தோடு 20,000 சிப்பாய்களை ஜெர்மானியர் ருமேனியாவுக்குள் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். ருமேனியாவானது பால்கன் நாடுகளில் ஒன்று. ஐரோப்பிய யுத்தங்களுக்கெல்லாம் மூலஸ்தானம் பால்கனுகும். இந்த யுத்தமாரம்பித்து 14-மாதங்கள் வரையில் பால்கனில் வம்புகள் வராதிருந்தது ஆச்சரியம்தான்.

ஹிட்லரால் விபத்துவருமென்று எதிர்பார்த்தே யுகோஸ்லாவியா மன்னர் அலெக்ஸாண்டரும், லூயி பார்த்தோவும் பால்கன் நாடுகளுக்குள் ஒரு ஸமரஸத்தை (Entente) ஏற்படுத்தினர்கள். இவர்கள் மார்ஸெயில்ஸ் கடற்கரையில் கொல்லப்பட்டதிலிருந்து ஸமரஸம் பலஹீனப்பட்டது. இப்பொழுது ஏற்பட்ட பிரான்ஸின் தோல்வியிலிருந்து ஸமரஸம் அடியோடு பாழாய்ப்போய் விட்டது.

பால்கன் நாடுகள் ஒன்று சேராதபடி பல்கேரியா முட்டுக்கட்டை போடுவது வழக்கம்; ஒரு சமயம் ரஷியாவோடும், மற்றொருசமயம் ஜெர்மனியோடும், அல்லது இவ்விரண்டு தேசங்களோடும் சேர்ந்துவிடும்; இந்தச் சமயம் கொள்ளைக்காரர்களோடு பல்கேரியா சேரக்கூடும். ஆனல் இதிலிருந்து ஒரு நன்மையும் பிறக்கலாம். ஜெர்மன் பூதம் தங்களையும் விழுங்கிவிடுமோவென்று, பாக்கி இருக்கும் பால்கன் நாடுகள் (அதாவது யுகோஸ்லாவியா, கிரீஸ், துருக்கி) தங்களுக்குள் நட்பை பலப்படுத்திக்கொள்ளலாம். இவைகளுடைய எல்லைகள் ஒன்றையொன்று ஒட்டி நிற்கின்றன. ஏற்கனவே, ரஷியாவினிடத்திருந்த துவேஷத்தை யுகோஸ்லாவியா மறந்துவிட்டது. ஏற்கனவே கிரீஸை ரக்ஷிக்க பிரிடன் வாக்குக்கொடுத்திருக்கிறது. ரஷியாவோடு ஏற்பட்டிருக்கும் நீடித்த நட்பை இழக்கத் துருக்கிக்கு மனம் வராது. இந்தக் காரணங்களால் அழிந்துபோன பால்கன் ஸமரஸம் இம்மூன்று நாடுகளுக்குள் புனருத்தாரணமாகலாம். துருக்கி ரஷியாவின் நட்பை நாடும்; வெளிப்படையாக பிரிடனேடு சேராவிட்டாலும், அதன் க்ஷேமத்தைக் கோரும்.

* * *

டாகார்.

இங்கு மறுபடியும் சண்டை நடக்குமோ, நடக்காதோ தெரியவில்லை. நடந்தால் வெற்றி நமக்கென்பதில் சந்தேகமில்லை. ஸெனிகல் (Senegal) வாசிகளுக்கு ஜெர்மனிக்குள் அடங்கிய விஷி (குடியேற்ற நாட்டு) அரசாங்கம் பிடிக்கவில்லை. பிறரை எளிதில் நம்பி ஜெனரல்-டி-கால் மோசம் போனர். அவர் அந்த இடத்தைவிட்டு வந்தபிறகு, கலகம் ஏற்பட்டு, தெருக்களில் யந்திர பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிலிருந்து நாம் யூகிக்கக் கூடியது:—

ஒன்று.—ஸெனிகல் வாசிகளுக்கு ஜெனரல்-டி-காலோடு சேரத்தானிஷ்டமென்பது பிரிடனுடைய அபிப்பிராயம். அது இன்னும் மாறவில்லை.

இரண்டு.—ஜெனரல்-டி-காலே எதிர்த்ததற்குக் காரணம் ஜெர்மனியின் செல்வாக்கும், சூழ்ச்சியுமென்று பிரிடன் அறியும்.

மூன்று.—டாகார் துறைமுகத்தில் பெரிய கடற் சண்டைபோட பிரிடனுக்கு இஷ்டமில்லே.

நான்கு.—தன் இனத்தாரோடு அதாவது, (சுதேசிகளோடு) ஜெனரல்-டி-கால் சண்டை செய்யாதிருப்பதற்காகவே ஆரம்பித்த சண்டையை பிரிடன் நிறுத்திக் கொண்டது.

ஸெனிகாலியர்கள் செய்த நம்பிக்கைத் துரோகத்துக்கு இனி அனுபவிக்கப் போகிருர்கள்.

* * *

மறுபடியும் பின்லண்ட்.

சென்ற வருஷம், பின்லண்ட், பாவம், பட்ட கஷ்டங்கள் ஞாபகத்திலிருக்கலாம். அங்கே மறுபடியும் இப்பொழுது வம்பு ஏற்பட்டிருக்கிறது. நார்வேயின் வடபாகங்களுக்கு இதன் வழியாக சைனியங்களை ஜெர்மனி அனுப்புகிறதாம். பிரிடன் இதை ஆக்ஷேபிக்கிறது. இது சுற்று மார்க்கம்; இந்த வழியாகத் துருப்புகள் போவதற்குக் காரணம் என்ன?

ஒன்று.—சாதாரணமாக, ஜெர்மனியிலிருந்து நார்வேக்கு ஏற்பட்ட பாதை டென்மார்க்கு—ஸ்காகர்ராக்—கடல் மார்க்கம். இங்கு தாண்டவேண்டிய கடல்—80 மைல் நீளம்தான். இந்த வழியாகப் பிரிடனுக்குப் பயந்து ஜெர்மன் கப்பல்கள் போவதில்லே. சமீபத்தில், அதாவது, ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று 3,000 சிப்பாய்களை ஏற்றிப்போன 'மரையன்' என்ற ஜெர்மன் கப்பலை 'ஸ்டர்ஜின்' என்ற பிரிடிஷ் நீர்மூழ்கி அமிழ்த்திவிட்டது. இது மூழ்கிய இடம் ஸ்காகர்ராக் என்று இப்பொழுது நிச்சயமாய்த் தெரிகிறது. ஸ்வீடன் தேசத்துச் செம்படவர்கள் யாரோ கட்டிவிட்ட பொய்க் கதையென்று சொல்லி ஜெர்மனி இந்த நஷ்டத்தை மறைக்கிறது.

இரண்டு.—நார்வேக் கரையோரமாய் மற்ருெரு பாதை இருக்கிறது. இது ஸ்காகர்ராக்கு மார்க்கத்தைவிடச் சற்று தூரம்தான். ஆனல், இதற்குப் பயந்து ஹிட்லர் துருப்புகளை இந்த வழியாக அனுப்பத் தயங்கவில்லே. இந்த மார்க்கத்தில் இடைவிடாது, சிப்பாய்கள், டாங்குகள், உணவு, வியாபாரப் பொருள்களை ஏற்றிப்போகும் ஜெர்மன் கப்பல்களையெல்லாம் பிரிடன் அமிழ்த்திவிடுகிறது. வட கடலும், அட்லாண்டிக் மகா சமுத்திரமும் பிரிடனுடைய ஆதிபத்தியத்தில் இருக்கின்றன.

மூன்று.—ஸ்வீடன் வழியாகத் துருப்புகளை அனுப்ப ஹிட்லர் பிரியப்படுவதுண்டு. ஸ்வீடனுடைய நடுநிலேயைக் கெடுத்து ஆயுதமின்றி அனுப்புவதாகச் சொல்லி (இது பொய்) சிப்பாய்களை இந்த வழியாக அனுப்பித்துவந்தார். இப்பொழுது பிரிடன்மேல் எடுத்த மின்னல் படையெடுப்புப் பலிக்காததிலிருந்து

ஸ்வீடன் சொன்னபடி கேழ்க்கவில்லை போலும்; முன்னைவிட அதிகமாக நடு நிலைமையைப் பாராட்டி, சைனியங்கள் போகாது, தடுத்திருக்கலாம்.

* * *

சில சிறு விசேஷங்கள்.

(1) ஜெர்மன் அதிகாரியான டெர்போபன் நார்வேயில் புது அதிகாரி (கமிஸார்) களை நியமிக்கும்போது நார்வே பார்லிமெண்டின் பிரதிநிதிகள் ஒருவராவது இந்த அதிகாரங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த விஷயத்தை நார்வே அரசரான ஹாகான் ஒரு ஒலிபரப்பில் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

(2) ஹாலண்டில் வசிக்கும் தொழிலாளர்கள் வெளியேற அனுமதிச் சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன. இவர்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிறார்கள். போக மறுத்தால் இவர்களுக்கு ஏற்பட்ட சாப்பாட்டுச் சீட்டுகளைக் கொடுக்க மறுக்கிறார்கள்.

அனுபந்தம் III.

பிரிடன் பேசுகிறது.

23, செப்டம்பர் 40.

ஜே. பி. பிரீஸ்ட்லி அவர்கள் சொல்லுகிறதாவது :—

பொறுப்பற்றவர்கள்.

எல்லோருக்கும் வந்தனம். இப்பொழுது இங்கே நிலை எவ்வாறு இருக்கிறது? புதிய ஸம்பவங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். படையெடுப்பு இன்னும் ஸம்பாவிதம்தான். ஆயினும் ஒவ்வொரு வாரம் அதை அவர்கள் தள்ளிப் போடப்போட படையெடுப்பு ஒரு தலைகால் தெரியாத சூதாட்டமாக நேரும். ஆனால் அதற்காக நாஸிகள் அவ்வாறு பிரயத்தனம் செய்யாமலிருப்பார்கள் என்று நினைப்பதற்கில்லை. ஏனெனில், அவர்கள் பொறுப்பற்ற சூதாடிகள்; இல்லையென்றால் அவர்கள் வேறொன்றும் இல்லையே. வெளி நோக்கத்துக்கு முகாந்திரமற்றதாகவும், பைத்தியக்காரத்தனமானதாகவுமான சூதாட்டமென்றும், ஆகையால் அப்படிப்பட்ட காரியமுறையை நாஸிகள் கைக்கொள்ளமாட்டார்களென்றும் அவர்களுடைய எதிரிகள் நினைத்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். நாம் ஒரு விஷயம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பழையகாலை ராஜதந்திரிகள் போன்று பொறுப்பும் சிரத்தையும் வாய்ந்து, தாங்கள் ஏதாவது பிழைகள் செய்தால், உத்தியோகத்திலிருந்து விலகி சௌக்கியமாக இருப்பவர்கள் நாஸிகள் இல்லை. ஒரு நொடிப்பொழுதில் தாங்கள் இருக்குமிடத்திலிருந்து சுட்டு வழிசெய்துகொண்டு போகத்தயாராக இருக்க வேண்டியிருக்கும் கூட்டுக் கொள்ளைக்காரர்களைப் போன்றவர்கள். அவர்களுக்கு

ஒன்று எல்லாம் கிடைக்கவேண்டும்; அல்லது ஒன்றுமே வேண்டியதில்லை. அதோடு அவர்கள் பிறவுயிர்கள் விஷயத்தில் காட்டும் அலக்ஷியமும், சாதாரணமாகவுள்ள பொறுப்புகள், நெறிகள் இவைகள் அறவே இல்லாமலிருத்தலும், தாத்காலிகமாக அவர்களுக்குச்சில நன்மைகளை அளிக்கிறது. ஆகையால் படையெடுப்பு வெற்றியுடன் நடந்தேறுவதற்கான அவகாசங்கள் குறைந்துகொண்டேவரினும், படையெடுப்பது இன்னமும் ஸம்பாவிதமேயென்று நினைத்து, நம்மைக்காணவருவோர்களுக்குத் தக்க வரவேற்பளிப்பதற்காக முஸ்தீபுகள் நடந்துகொண்டிருக்கின்றன. மற்றொருபுறம் பார்த்தால், இந்தக் கொந்தளிக்கும் குளிர்ச்சியான கடலைத் தாண்டுவதைக்காட்டிலும் ஜிப்ரால்டர் எகிப்து, ஸூடான் முதலிய பிரதேசங்களை ஜெர்மானிய இதாலியக் கூட்டு தாக்குவது அவர்களுக்குக் கொஞ்சம் தேறுதல் கொடுக்கக்கூடிய ஏற்பாடாக இருக்கிறது. ஏனெனில் இங்கிலாந்திற்கு அவர்கள் வருவதாயிருந்தால் திரும்பிப்போக அவர்களுக்கு டிக்கட்டு கிடையாது. சற்று கவனிப்போம். இந்த இடத்தில் உங்களுக்கு கொஞ்சம் பொறுமைக் குறைவு ஏற்பட்டு, முதன் முதலில் தாக்குவதை ஹிட்லருக்கு விடுவானேன், நாம் காத்துக் கொண்டிருப்பானேன் என்று கேட்கலாம். அது வெகு முக்கியமான கேள்வி; அதற்கு ஸம்பூர்ணமான பதில் அத்தியாவசியம்.

பிரிடிஷ் முன்னேறுதல் என்பது ஸாராம்சத்தில்.

(i) முற்றுகை.

முதன்முதலாக இந்த ஸமயத்தில்கூட கேவலம் தற்காப்பிலேயே நாம் இல்லை. அடுத்தபடி ஹிட்லர் என்ன செய்வான் என்ற பேச்சில் இந்த விஷயத்தை மறந்துபோகக்கூடாது. நாஸியின் யுத்த திட்டத்தைக் கழுத்துச்சுருக்காக நெருக்கிக்கொண்டும், நம்முடைய கடற்கரைகளைக் காத்துக்கொண்டும் பிரிடிஷ் கடற்படையானது வெகு சக்தியுடனும், சீராகவும் வேலைசெய்து வருகிறதென்ற விஷயத்தைக் காக்ஷிக்கு விமரிசையான வான யுத்தத்திலும், நாஸியின் மதியற்ற பிரசாரத்திலும் மறந்து போகக்கூடாது. பிரிடிஷ் முற்றுகையைப்பற்றி நீங்கள் அதிகம் கேள்விப்படாவிடினும், அது இன்னும் நடந்துகொண்டேயிருக்கிறது. நமக்கு அவசியமானவைகளை சுமந்துகொண்டு நம் கப்பல்கள் நடு ஸமுத்திரத்தில் செல்லுகின்றன, ஆனால் ஜெர்மன் கப்பல்களோ, அந்த ராஜ்யத்திலேயே இருக்கின்றன, அல்லது ஜெர்மானியர்களுக்கு ஒன்றும் கொண்டுவராமல் கரையோரமாக ஊர்ந்துசெல்லுகின்றன. நமக்கு நேர்ந்த கப்பல் நஷ்டங்கள் குறைவில்லை; ஆயினும் சென்ற மஹாயுத்தத்தில் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களால் ஏற்பட்ட நஷ்டத்தைக் காட்டிலும் இப்பொழுது வெகு ஸ்வல்பம். மேலும் நமக்கு நேசமாயுள்ள பல தேசங்களிலிருந்து ஏராளமான கப்பல்கள் நமக்குக் கிடைத்திருக்கிறது.

ஜெர்மனியும் ஐரோப்பாவின் பாதிபாகத்தில் பரவிக்கொண்டதால், அதன் ஆகார பிரச்னை சிறிதுகாலம் ஒதுக்கிப் போடப்பட்டிருக்கிறது. ஆயினும் முக்கியமான யுத்த தளவாடங்களின் குறைவு அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

ஏனெனில் ஜயிக்கப்பட்ட தேசங்களில் அவை கிடையா. எண்ணெய் பிரச்னை இன்னும் அப்படியே யிருக்கிறது. ஜெர்மன் விமான வேலையின் பரபரப்பினுலும் பிரிடிஷ் விமானங்கள் எண்ணெய்க்கிடங்குகளையும்; சுத்தி சாலைகளையும் தாக்குவதாலும், இருக்கப்பட்ட எண்ணெய் சேகரம் வெகுவாகக் குறைந்துவிட்டது.

சுருங்கச்சொல்லில், நம்முடைய பிரத்யேகமான முன்னேறி தாக்குதல் என்னவென்ருல், நிசப்தமாகவும், நிராடம்பரமாகவும் சத்துருவை அமுக்கிவரும் கடற்படையே. அது அயர்ந்து நடந்துவருகிறது. நாம் அதை சில ஸமயம் மறந்துபோனுலும் ஜெர்மன் ஸேனுபதி ஸமூஹமும், அவர்களுடைய நிபுணர்களும் மறக்கமாட்டார்கள். கழுத்தைச் சுற்றியிருக்கும் ஒரு பலமான கையை மறக்க முடியாது.

(ii) நாம் ஐரோப்பா கண்டத்தில் செய்யும் தாக்குதல்கள்.

அது மட்டுமல்ல. நாம் நிறுத்தாமல் முன்னேறித்தாக்கிக்கொண்டிருக்கும் உபாயம் மற்ருென்று இருக்கிறது. நம் விமானம், வெடி குண்டு கொண்டு அவைகளின் லக்ஷியங்களான தொழிற்சாலைகள், தண்டவாளங்கள் முதலிய போக்குவரத்து சாதனங்கள், கப்பல்கள், படைச் சேகரங்கள் முதலியவைகளை பிரதி ராத்திரியும் தாக்கி, ஏராளமான நஷ்டத்தை உண்டாக்கி வருகிறது. இது நில்லாமல் நடப்பதோடுங்கூட, இன்னும் மிகப் பெரிதான வெடி குண்டு விமானங்கள் நமக்குக் கிடைக்கக் கிடைக்கவும், இரவு நேரம் ஜாஸ்தி ஆக ஆகவும், விருத்தியாகிக்கொண்டே வந்து இன்னும் வெகு தூரம் சென்று வெகு நேரம் நின்று தாக்கும். தற்சமயம் ஜெர்மனியிலும், ஜாஸ்தியாக கால்வாய் துறை முகங்களிலும் வெடி விமானங்கள் தங்கள் கவனத்தை ஒருங்கே செலுத்துகிறது. அங்கு தண்டவாளங்களும், துறைமுகங்களும், சேகர தளங்களும், படைகள் நெருக்கமாய் அடைக்கப்பட்ட படை கொண்டுபோகும் படகுகளும் மின்னெளி பரவும்படியாக வெடிகளால் அடிக்கப்படுகின்றன. அதனல் நமக்கு நஷ்டம் குறைவாகவும், நாஸிகளுக்கு நஷ்டம் அதிகமாகவும் ஏற்படுகிறது. படையெடுப்பு எண்ணத்தை அவர்கள் விட்டுவிட்டால், ஜெர்மன் தொழிற்சாலைகள் வாஹன வசதிகள் முதலியவைகள் தாக்கக்கூடிய ஸம்பூர்ணமான வெடி விமானப் படை நம்மிடம் தயாராக இருக்கும். ஆகையால் நில்லாமல் வேலை செய்து எறித்தாக்கும் சாதனங்களில் இது ஒன்று. இது வரை கடற்படையைப்பற்றியும், விமானப்படையைப்பற்றியும் சொல்லப்பட்டது.

சைன்யத்தைப்பற்றி கவனித்தால், எதிரியுடையதைக் காட்டிலும் வெகு சிறிய படையென்று தெரிகிறது. அது வெகு சீக்கிரமாகவும், ஜாஸ்தியாகவும், ஆயுதங்களால் பலப்படுத்தப்படுகிறது. இந்த க்ஷணத்தில் பிரிடிஷ் சேனையானது தற்காப்பில்தான் இருக்க முடியும் என்பது தெளிவு. ஆனுல் அதன் தலைவர்கள் அதைத் தற்காப்பைத்தவிர வேருென்றும் செய்யச் சொல்லவில்லை என்று நினைப்பதைக்காட்டிலும் தவறு வேருென்றும் கிடையாது. முன்னேறித் தாக்குவதற்கும் அவர்கள் பழக்கப்படுகிருர்கள். அதைக் காட்டிலும் பல மடங்கு பெரிதான சேனைகளுக்கு முன் அது ஜயிக்க முடியுமாவென்று

நீங்கள் கேட்கலாம். சந்தர்ப்பங்களைக் கவனித்தால் ஐரோப்பா கண்ட பிரதேசத்தில் நம் சேனை ஜயிக்க நினைக்க முடியாது. ஆனால் சென்ற மகாயுத்தத்தில் போல அந்த ஜீவாதாரப் பகுதியான ஆகாயமும், நம்முடைய ஆதீனத்துக்குள் வந்துவிட்டால்—பிறகு என்ன? சேனையின் எண்ணிக்கை என்பது பொருட்படுத்தக்கூடிய விஷயமல்ல. நன்றாக ஆயுத பரிக்ரஹம் செய்யப்பட்டதும், வெகு வேகமாகத் தாக்கக்கூடியதுமான படையானது, வெடி விமானங்கள், சண்டை விமானங்கள், சுற்றிப் பார்க்கும் விமானங்கள் அடங்கிய உயர்வான ஆகாயப்படையுடன் ஒத்துழைத்தால், எண்ணிக்கைப் பெருக்குள்ள பெரிய சேனையைக்கூட நசுக்கிக்கொண்டே முன்னேறும் என்று நாஸிகளாலேயே காட்டப்பட்டிருக்கிறது.

நாஸிகளிடம் அகப்பட்டுக்கொண்டவர்களின் உணர்ச்சி.

நிலைமை ஜெர்மனிக்கு பாதகமாகிக் கொண்டே வரும் பொழுது, நாஸிகளால் ஜயிக்கப்பட்ட தேசங்களின்பேரில் அவர்களுக்குள்ள பிடியும் தளர்ந்து கொண்டே வரும். ஜயிக்கப்பட்டவர்களிடமிருந்து மேலும் மேலும் கடுமையான நிபந்தனைகளைக் கேட்பார்கள். ஜயித்தவன் தரிக்கும் மகமல் கை உறையும் மெல்லியதாகக் கரைந்து கொண்டே வருகிறது. நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய தேசங்களும் மகமல் கை உறைக்குள் மறைந்திருக்கும் இரும்புக் கையை உணருகிறார்கள். ஒவ்வொரு நாஸியும் தன்னுடைய உத்தமமான ஒழுக்கத்துடன் இரண்டு, மூன்று மாதங்கள் புழங்குவதென்பது ஒருவாறு சரியாக இருக்கும். அதற்குப் பின் மாதங்களில் நாஸி தன் சொந்த வழக்கத்திற்குத் திரும்பிவிட்டாலோ, அது வேறு சமாசாரம். ஐந்தாவது அணியார்களைப் பற்றிப் பேசுவோமானால், ஒவ்வொரு தேசத்தின் பூரா ஜனங்களும் ஜெர்மனிக்கு விரோதமாக ஐந்தாமணிகளாக வேலை செய்யத் தயாராக இருப்பதால் அவர்களோடு நிர்வகிக்கவேண்டியிருக்கிறது. பிரிடன்தான் உண்மையான சத்துருவென்றும், பிரிடிஷ் மூலாஜாவிலிருந்து விடுவித்து, புதிய ஐரோப்பிய திட்டத்தை ஏற்படுத்த ஹிட்லர் பாடுபடுகிறார் என்றும், மேற்கு ஐரோப்பாவை திருப்தி செய்ய நாஸிகள் ஏன் இவ்வளவு படாதபாடு படுகிறார்கள் என்று இதில் இருந்து விளங்கும். ஆனால் இந்தப் புதிய திட்டம் என்பது நம் காலத்தில் ஒப்பிலாக் கொடுங்கோன்மையும், ஜெர்மனியின் பொருளாதார ஆதிக்கமும்தான் என்பதை அவர்கள் விவரிக்கவில்லை. நாஸிகளிடமிருந்து லஞ்சம் பெறாத வரை இம்மாதிரியான ஜெர்மன் பேச்சுகளை, அவர்கள் அந்த தேசங்களுக்குள் புகுவதற்கு முன் கூட, அந்த தேசத்தார்களில் ஒருவரும் நம்பமாட்டார்கள். இழி குணங்கள் உள்ளவர்கள்தான் தம் குணங்களை மறைத்துக்கொள்ள பெருமை பேசிக் கொள்வது, டம்ப வார்த்தைகள் பேசுவது, பயமுறுத்தித் துன்புறுத்துவது, முதலிய காரியங்களைச் செய்வார்கள். அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் நாஸிகள். சற்றுமுன் வரை ஆயிரக்கணக்காக ஜனங்களைக் கொன்று கொண்டிருந்த அவர்கள், பிறகு அந்த ஜனங்களுடைய உற்ற நண்பர் போல நடிப்பதென்பது சாத்தியமில்லை.

நம்முடைய கடற்படையும், விமானப்படையும் இடைவிடாமல் தாக்குவதால் இந்த வேனிற்காலத்தில் ஜெர்மானியர் பெற்ற வெற்றியைக் குலைத்துவிட்டது. நாஸி யுத்த நிர்வாகத்தைக் குறைத்துவிட்டது. ஜெர்மன் வானப்படையைக் காட்டிலும் பராக்கிரமத்தில் பெரிதென்று ஒப்புக்கொள்ளப்படும் நம் விமானப் படை இப்பொழுது எண்ணிக்கையில் ஜெர்மனியுடன் சமமாக ஆவதோடு, ஜெர்மன் ஆகாய சக்தியைக் கீழ்படுத்தக்கூடிய நிலைக்கு ஏறிக்கொண்டிருக்கிறது. நம் நிலப்படையும், சீக்கிரமாகவும், பயங்கரமாகத் தாக்கக்கூடிய ஒவ்வொரு உபாயத்தோடு பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆகையால் நாஸிகளால் பிடிக்கப்பட்ட வெகு நீண்ட கடற்கரையில் பல இடங்களில் அடித்து, உடைத்து வழி செய்து கொண்டு போவதற்குப் போதிய அவகாசமிருக்கிறதென்று நம் தலைவர்கள் நினைப்பது காரணமில்லாமல் இல்லை.

ஸாம்ராஜ்ய அனுபவத்தின் நன்மை.

நாஸிகள் எவ்வளவு பெருமை பேசிக்கொண்டாலும், அவர்களைக்காட்டிலும் நமக்குப் படையெடுத்துச்செல்லும் சைன்யங்களைப்பற்றி நன்றாய்த் தெரியும். இது நமக்குப் பழகினவேலை. அவர்களுக்கோ வெகு புதியதும் அபாயகரமானதுமான வேலை. ஏனெனில், அது கடல் சக்தியை ஒட்டினதாக இருக்கிறது. வேனிற்காலத்தில் பெற்ற மின்னல் வெற்றிகளால் மதோன்மத்தர்களாயிருக்கும் நாஸிகள் இந்த ரகஸ்யத்தை அறியவில்லை. பிரான்ஸ் வீழ்ந்த பிறகு, பலத்த பயமுறுத்தல்களையும், கூவுதல்களையும் கேட்டு பிரிடன் ராஜி வேண்டுமென்று பிரார்த்திக்கும் அல்லது பிரிடனுடைய யுத்தப் பிரயத்தனங்கள் ஸ்தம்பித்துப் போய் ஜெர்மனியால் ஜயிக்கப்படும் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனல் பிரெஞ்சு தோல்விக்குப்பிறகு வெகு ஸங்கதிகள் ஜெர்மனிக்குப் பிரதிகூலமாக நேரிட்டன. பிரெஞ்சு கடற்படையை நமக்கு எதிர்த்துப் பிரயோகம் செய்யமுடியாதென்று கண்டார்கள். மேலும் இதாலியர்கள் தம் கப்பற்படையை மத்தியதரைக் கடற்குள்ளோ, அல்லது ஜிப்ரால்டர் என்ற இடையூறை எதிர்த்து மீறிப் பரிகரித்து வெளியில் வந்தோ, பிரிடிஷ் கடற்படைக்குப் பலி கொடுக்கத் தயாராகயிருப்பதாகக் காணவில்லை. மேலும், நாஸி பயமுறுத்தல்கள் நமக்குள் வேற்றுமை ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஊக்கத்தை வளர்த்து, யுத்தப் பிரயத்தனத்தை விருத்தி செய்தது.

ஜெர்மனியில் திரைக்குப் பின் எல்லாம் நிலைகுலைந்திருக்கிறது.

சென்ற வாரம் எடுத்துக்கொண்ட விசித்திரமான நாஸி உபாயங்களுக்குக் காரணம் இதிலிருந்து விளங்குகிறது. அவர்களுக்கு வழக்கமான உபாயமாகிய "ஒரே மூச்சில் எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு போதல்" என்பதற்குப் பதிலாக அவ்வப்பொழுது ஏதோ எல்லாம் கலந்த கதம்ப யுக்திகளாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சண்டை விமான தளங்களை அழிப்பதற்காக முதலில் தென்கிழக்குக் கரையில் கூட்டமாகத் தாக்கினார்கள். நம் தற்காப்பு ஊக்கத்தை முறிக்க முடியவில்லை. அனுபவம் வாய்ந்த விமானிகளிலும்,

விமானங்களிலும் நஷ்டம் ஜெர்மனிக்கு ஏற்பட்டது பயங்கரமான அளவுக்கு இருந்தது. அதற்குப் பிறகுதான் வர்ஜாவர்ஜமின்றி லண்டனைத் தாக்கித் திகி லுண்டாக்குவதற்காக வெடிகுண்டுகளை வீசுகிறார்கள். இவ்வாறு செய்வார்கள் என்று நாம் எப்பொழுதும் அறிந்ததே. நாஸிகள் வேறு வழியில்லையென்று நினைத்தாலொழிய இப்படிச் செய்யமாட்டார்கள் என்றும், இவ்வாறு பயமுறுத்தும் குண்டுகளைப் போர் செய்யாத ஜனங்கள்மீது பிரயோகம் செய்வதிலிருந்து உலகம் முழுவதும் முக்கியமாக அமெரிக்காவிலும் தக்ஷணமே அருவருப்பு உண்டாகும் என்றும், எல்லாம் தோற்றவன் கடைசியாட்டமாக எரியும் சதுரங்கக்காய் போன்ற தென்றும், என்மட்டுக்கு நான் எப்பொழுதும் அபிப்பிராயப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். மேலும் லண்டன் தலைநகரில் வெகு ஏழைகள் இருக்கும் கீழ் முனையிலிருந்து பக்கிங்ஹாம் அரண்மனை முடிய ஒவ்வொரு பாகத்திலும் வெடி போட்டதிலிருந்து, தேசம் முழுவதும் ஒற்றுமையை விருத்திசெய்து இருப்ப தோடுங்கூட, எப்பொழுதும்போல யுத்த ஸம்பாரங்கள் நடந்துவருகிறது. ஏதோ சில தனிப்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட துக்க ஸம்பவங்கள், மனக்கிலேசம், அஸௌகர்யங்கள் இவைகள் விஞ ஜனங்கள் பூருவும் ஆக்ரோசத்துடனும் ரோசத் துடனும் என்றும் காட்டிலும் நிச்சயபுத்தியுடனும் இருக்கும்படி செய்துவிட்டது.

இவையெல்லாவற்றிற்கும் பின்புறமாக ஜெர்மனியில் பரஸ்பர விரோத மானதும் விசித்திரமும் குழப்பமானதுமான ஒரு பிரசாரம் நடந்துவருவதைப் பார்த்தால் கோயபல்ஸ் இலாகா வேலை செய்வதற்கு ஒரு முகமான வழிகாட்ட முடியவில்லை என்று தெரிகிறது. ஏனெனில் அங்கு ஒருமுகமான வழி கிடையாது. சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்புதான் மேற்கு ஐரோப்பா முழுமையும் வியாபித்து உலகத்தின் உச்சியிலே ஜெர்மனி உட்கார்ந்திருந்தது. இன்னும் சில வாரங்களில் எல்லாக் காரியங்களும் முடிந்துவிடும் என்றார்கள். ஸமாதான நிபந்தனைகளைச், சொல்லவும், ஜயப்பவனிகளுக்கும் தேதிகள் குறிப்பிடப்பட்டன. இப்பொழுது ஒவ்வொரு உபாயங்களாகப் பரீக்ஷைபார்க்க வேண்டியிருக்கிறது. விலையிலா வீரர்களையும், யந்திரங்களையும், தளவாடங்களையும் அவஸரமாக பலி கொடுக்க வேண்டியிருக்கிறது. அவஸரமாகக் கூட்டங்கள்போட்டு இங்கும் அங்கும் ஓடவேண்டியிருக்கிறது. இன்னும் ஒருவாரத்தில் யுத்தத்தில் வெற்றி பெறுவோம் என்று பாசாங்கு செய்யவேண்டியிருக்கிறது. கடைசியாக, வெகுநாள் வெகு கடினமாக யுத்தம் செய்யவேண்டிவரும் என்று ஒப்புக்கொள்ளவேண்டி யிருக்கிறது. ஜெர்மனியின் மாறுதல் வெகு விசித்திரமானது என்று யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். திரைக்குப் பின்புறம் எல்லாம் பிசகாக நடந்து கொண்டிருக்கிறதென்று தெரிகிறது. ஏதன் மத்தியில் நாம் புதிய ஸம்பவங்களை எதிர்பார்த்திருப்போம் என்று வற்புறுத்துவேன்.

எல்லோருக்கும் வந்தனம்!

அனுபந்தம் IV.

வார யுத்தச் செய்திகள்.

(9—10—40 லிருந்து 16—10—40 வரை).

அக்டோபர்மீ 11-ம்டயோடு முடிவான வாரத்தில், அதற்கு முந்திய வாரம் போலவே, பிரிடன் ஜெர்மனியை பலமாய்த்தாக்கியது. படையெடுத்த இடங்களாவன :—

1. பேர்லின்—சக்தி உற்பத்திச்சாலை, வாயு (gas) உற்பத்திச்சாலைகள், விமான இன்ஜின்கள் செய்யும் சாலைகள், மின்சார சாமான்கள் செய்யும் சாலைகள், ரயில் பண்டகசாலைகள்.

2. எஸ்ஸனில் குருப்ஸ் சாலை. கிரவன் பராவில் அலுமினியம் சாலையும், கரிக் கட்டை செய்யும் (Carbon electrode) சாலையும், ஹனுவில் கொல்லுப்பட்டரைகள், ஆம்ஸ்டர்டாமில் விமானங்கள் கட்டும் பாகர் தொழிற்சாலை. குருப்ஸ் தொழிற்சாலை இரண்டு தடவையும், பாகர் தொழிற்சாலை 3 முறையும் தகர்க்கப் பட்டன.

3. நார்வேக்கு அருகாமையில் ஜெர்மன் சாமான் கப்பல்கள் அமிழ்த்தப் பட்டன.

4. வியாழக்கிழமை இரவு 1,500,000 மெட்ரிக்டன் எண்ணெய் அடங்கிய 7 எண்ணெய்ச்சாலைகள் (ரேனேனியா—ஆஸாக் சாலையுள்பட) பலமாய் எதிர்க்கப் பட்டன.

5. ஹாம்பர்கில், ஒரு கிலோ மீட்டர் விஸ்தீர்ணத்துக்கு பலமான சேதம் ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் துறைமுகங்கள்மேல் 6 எதிர்ப்பு; கரை தற் காப்புகள், கப்பல்கள்மேல் 58 எதிர்ப்பு; ரயில் ஜங்ஷன், பண்டகசாலைகள்மேல் 28 எதிர்ப்பு; தொழிற்சாலைகள்மேல் 13 எதிர்ப்பு; விமான நிலயங்கள்மேல் 35 எதிர்ப்பு; எண்ணெய் சுத்தி செய்யும் சாலைகள் மேல் 12 எதிர்ப்பு; பொது ஸ்தலங்கள்மேல் 7.

இந்தக் குறிப்பின் முடிவில் இந்த வாரத்திய பிரிடிஷ் விமான நிகழ்ச்சிகளின் விவரத்தைக் காணலாம். மழை, புயலடித்தும், இவைகளை லக்ஷியம் செய்யாது பிரிடிஷ் விமானங்கள் இந்த வாரத்தில் வழக்கம்போல் எதிரி நாடுகளைத் தாக்கி வந்தன. உதாரணமாக, சனிக்கிழமையன்று பெர்லின் நடுப்பாகம் தாக்கப்பட்டு நகரத்தில் நடமாட்டம் நின்றுவிட்டது. டிராம் வண்டிகள் நின்றுபோய் அதில் இருந்த டிரைவர், கண்டக்டர், பிரயாணிகள் எல்லோரும் மறைவிடங்களுக்கு ஓடினார்கள். சினிமா காக்ஷிகள் நடுவில் நிறுத்தப்பட்டு, வேடிக்கை பார்ப்பவர்கள் சுரங்க அறைகளில் ஒளிந்தார்கள். போஜன சாலைகளில் பரிமாறுவது நின்று விட்டது. கோயரிங்கு வார்த்தையை நம்பி பெர்லினைத் தாக்க முடியாதென்று நினைத்த பர்லின் நகரவாசிகள் வெகு அவமானப்படுகிறார்கள்.

இதர ராணுவஸ்தலங்களும் இதற்கும் அதிகமாக எதிர்க்கப்பட்டன. பிரமன் நகரத்தின்மேல் எதிர்ப்பு ஓயவேயில்லை. பிரமன் நகரத்தைவிட பிரமன் துறை முகம் அதிகச் சேதமாய்விட்டது. அது பல கிட்டங்கிகளும், துறைகளுமடங்கிய பெரிய கப்பல் படை நிலயம். இதேமாதிரி ஹாம்பர்க் துறைமுகமும் அதிகப் பழுதாய்விட்டது. இதைச் சரிப்படுத்த வெகுநாள் பிடிக்குமென்று சொல்லப் படுகிறது. இங்கே வேலை பார்த்துவரும் யுகோ-ஸ்லாவ் வேலைக்காரர்கள், இரவு தவறாது நடக்கும் பிரிடிஷ் எதிர்ப்பை சகிக்கமுடியாமல் ஊருக்குத் திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எதிரி பிடித்திருக்கும் கடற்கரை எல்லாம் இடைவிடாது தகர்க்கப்படுகிறது. ஜெர்மனி இங்கிலாந்தை எதிர்ப்பதைக் காட்டிலும், இது வெகு பலமாயிருக்கிறது.

சென்ற இரண்டு வாரங்களாக பிரிடன்மேல் விமான எதிர்ப்புக் குறைந்து கொண்டுவருகிறது. அசந்துபோய், தோல்வியுற்று, ஜெர்மனியானது இந்தப்படை யெடுப்பை நிறுத்தியும் விடலாம்; அக்டோபர் 7-ம் தேதி திங்கட்கிழமை மிஸ்டர் சர்ச்சில் சொன்னமாதிரியாகக் கணக்கிட்டால், ஒரு மனிதனின் நாலில் மூன்று பாகத்தைக்கொல்ல ஜெர்மனிக்கு ஒரு டன் குண்டு செலவாகிறது. மேலும் இப்பொழுது யுத்தம் நடக்கும் மாதிரியில், லண்டனில் பாதி வீடுகளை வெடிகளால் உடைக்க இன்னும் 10-வருஷங்கள் செல்லும். 10-வருஷத்தைக் கண்டது யார்? ஹிட்லரைக்கண்டது யார்? அதற்குள் அவரும், அவர் அரசாங் கமும் தொலைந்துவிடும். அது நிற்க, ஆகஸ்டு 15, ஸெப்டம்பர் 15, ஸெப்டம்பர் 27—இந்தத் தேதிகளில் பிரிடிஷ் விமானங்கள் எதிர்த்து நின்று வீரப்போர் செய்த திலிருந்து, பிரிடனைப் படையெடுக்கும் கற்பனை ஹிட்லருக்கு இப்போதைக்கு நின்றுவிட்டதுபோல் தோன்றுகிறது. இந்த யுத்தத்தில் இது ஹிட்லருக்கு ஏற்பட்ட முதல் பெரிய தோல்வியாகும்.

ஆம். யோசித்துப்பார்த்தால், பிரிடன்மேல் மின்னல் படையெடுப்பு நின்று ஜெர்மனியின் முற்றுகை துவக்கிவிட்டாற்போல் தோன்றுகிறது. முதலாவதாக ஜெர்மனிக்கு எண்ணெய்ப்பஞ்சம் வந்துவிட்டது. எண்ணெய்ப் பாத்திரங்களுடைய அடிப்பாகம் வரண்டப்படுகிறது. பெட்ரோல் இல்லாமல் இதாலிய விமானங்கள் தரையில் விழுந்துவிடுகின்றன. ஜெர்மன் ஆக்கிரம நாடு களில் பஞ்சம் வந்துவிட்டது. பஞ்சத்திலிருந்து கலகம் வரும்போலிருக்கிறது. நார்வேயிலும், ஹாலண்டிலும் போலீஸாரால் கலகங்களை அடக்கமுடியவில்லை. சொன்னதைக் கேட்டுக்கொண்டிருக்கும் பேதையான விஷி-கவர்ன்மெண்டுகூட, பிரிடன் சார்பாகவும், ஜென்ரல்-டி-கால் சார்பாகவும் கலகங்கள் நடப்பதாக ஒப்புக்கொள்ளுகிறது. பிரெனென் மலைக்கணவாயில் சந்தித்தபோது இந்தக் கஷ்டங்களைப்பற்றி வழிபுரியாமல் ஹிட்லரும், முஸோலினியும் கலந்து பேசியிருக்கவேண்டும்.

ருமேனியா— கொஞ்சம் கொஞ்சமாக, அக்டோபர் 14-ம் தேதியோடு பான்ஸர்கோர் என்ற 30,000 ஜெர்மன் படைகள் ருமேனியாவுக்குள் வந்து விட்டன. ருமேனிய சைன்யங்களைப் பழக்கவும், அவைகளுக்கு யோசனைகள்

சொல்லவும், எண்ணெய் நிலயங்களைப் பாதுகாக்கவும், வியன்னாத் தீர்ப்பை நிறைவேற்றவும் வந்திருப்பதாகப் பலவாறாக சாக்குகள் சொல்லப்படுகின்றன. ஜெனரல் அன்டொனிஸ்கு, ஜெர்மனிக்கு அடிமையாய்ப்போனதோடு நில்லாது இவர்களை அரசருக்கென்று வைத்திருக்கும் ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்றார். இது வெகுக் கேவலம். இந்தத்துருப்புகள் பல்கேரியா அல்லாது வேறு வழியாக வந்திருக்கமுடியாது. ருமேனியா நடுநிலைமை வகித்ததெல்லாம் பாழாய்ப்போய் விட்டது.

ருமேனியாவை ஆக்கிரமித்துக்கொண்டு ஜெர்மன் துருப்புகள் கடற்கரையை நாடிப்போவதின் உத்தேசம் தெரியவில்லை. பால்கன் நாடுகள் எல்லாவற்றையும் ஆக்கிரமிக்கும் உத்தேசமிருக்கலாம். கிரீஸ் ஜாக்கிரதையாயும் கவனமாயும் இருக்கிறது. 'பாஸ்பரஸ்', நடு-கிழ்-நாடுகளை அணுகிவந்தால் தன்னுடைய 2,000,000 துருப்புகளைக்கொண்டு எதிர்க்கத் தயாராயிருப்பதாகத் துருக்கி சொல்லுகிறது. ஜெர்மனியின் சைன்யங்கள் ரஷியாவுக்கு ஈட்டியைப்போல் பக்கத்தில் வந்து நிற்கின்றன. டான்யூப் நதியின் அக்கரையில் 20 சைன்யங்களை ரஷியா நிறுத்தி வைத்திருப்பதாகப் பிரஸ்தாபம்.

இனி என்ன நடக்குமோ தெரியவில்லை. கப்பல் நிலயங்களைக் கட்டப் போவதாயும், ஜெர்மனியின் நீர்-மூழ்கிகளில் சில கருங்கடலுக்கு வந்துவிட்டதாயும் ஒரு வதந்தி. ஆசியா-மைனர், இராக், எகிப்து முதலிய இடங்களைப் பிடிக்க எண்ணம் கொண்டிருப்பதாக மற்றொரு வதந்தி.

ருமேனியாவுக்கு அமெரிக்காவில் 1,000 லக்ஷம் பவுன் செலாவணியுண்டு. அமெரிக்கா இதை நிறுத்திவிட்டது.

ருமேனியாவுக்கு உள் நாட்டுக் கஷ்டங்களும் ஏற்பட்டுவிட்டன. மட்ட தினுசு ரொட்டிதான் அகப்படுகிறது; அதற்கு விலை முன்னைவிட இரட்டித்துவிட்டது. வாரத்துக்கு 3-நாள் இறைச்சி கிடையாது. வெண்ணெய் அகப்படவில்லை. மற்றைய உணவுப் பொருள்களும், விறகு (அடுப்புக்கரியு)ம் வெகு கிராக்கியாய்விட்டது. பிளோயஸ்டா பிரதேசத்தில் பாய்காவில் மூன்று எண்ணெய்க் கிணறுகள் தீப்பிடித்துக்கொண்டன. ஜெர்மன் வேலைக்காரர்கள் அணைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கா.—மூவரசு ஒப்பந்தம் முடிந்ததிலிருந்து பிரிடனுக்கு அமெரிக்காவில் இருந்து உதவி பரிபூரணமாய் வந்துகொண்டிருக்கிறது. நெதர்லண்ட்-இந்தியத்-தீவுகளிலிருந்து ஜப்பானுக்கு வெள்ளீயம், ரப்பர் ஏற்றுமதி நின்றுவிட்டது. பஸிபிக், அட்லாண்டிக் சமுத்திரங்களைப் பாதுகாக்க 23 கப்பல் படைகள் அநேக இடங்களுக்குப் புறப்பட்டுவிட்டன. ஹாவாயில் சைன்யங்கள் பலமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. 'சமாதானப் பேச்சு இப்பொழுதும் கிடையாது, எப்பொழுதும் கிடையாது' என்று வெண்டல் வில்கி சொல்லிவிட்டார். சனிக்கிழமை இரவு கொலம்பஸ்-தினக்கொண்டாட்டத்தில் பேசும்போது ரூஸ்வெல்ட் "பிரிடிஷ் மக்கள்—புருஷர்களும், ஸ்திரீகளும்—ஸ்வதந்திரத்தை அனுபவிக்கும் ஜனங்கள். ஸ்வதந்திரத்தைக் காப்பாற்றும் வழியைக் காட்டி

விட்டார்கள். பொறுப்பாக்ஷி தேசங்கள், எதிர்க்கப்பட்டால் எவ்வளவு தைரியமாய் தங்களைக் காத்துக்கொள்ள முடியுமென்பது பிரிடன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதிலிருந்து வெளியாகிறது. ஸர்வாதிகாரிகள் ஒன்று சேருவதைக் கண்டு பயப்பட்டு வீரப்போர் செய்யும் பிரிடனுக்கு உதவியை நிறுத்தமாட்டோம்." என்று சொன்னார்.

அமெரிக்கா செய்துவரும் ஏற்பாட்டிலிருந்தும், பர்மா-யுனன் ரஸ்தாவையும் அதையொத்து ஹாங்காங் ரஸ்தாவையும் பிரிடன் திறப்பதிலிருந்தும் ஜப்பானுடைய அகம்பாவப்பேச்சு சற்றுக் குறைந்திருக்கிறது. 'மூவரசு-உடன்படிக்கை' உண்மையில் சமாதானத்துக்காகச்செய்து கொண்டதாகவும், அதிலிருந்து வேறு நடுநிலை நாடுகளுக்குள் யுத்தம் வருவதைத் தான் பயந்து, நடுங்குவதாயும் ஜப்பான் மந்திரி அறிக்கை விடுத்திருக்கிறார்.

ஜப்பான் நடுங்குவதற்குக் காரணங்களுமுண்டு. ராய்டர் தேசிய-நிருபர் இதைப்பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார் :—

ஜப்பானுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் பொருளாதார சங்கடங்கள் பலவுண்டு. பிரிடனையும், யுனைட்டட்-ஸ்டேட்ஸையும் பகைத்துக்கொண்டால் இனி வரக்கூடிய நஷ்டமதிகமாகும்.

அயல் நாடுகளில் ஜப்பானுக்குப் பணச் செலாவணி கொஞ்சம். ஏற்றுமதி வியாபாரமிருப்பதால இப்போது ஸமாளித்து வருகிறது. இப்பொழுது வியாபாரம் செய்துவரும் தேசங்களைப் பகைத்துக்கொண்டால் இந்த வியாபாரம் நின்றுவிடும். யுனைடட்-ஸ்டேட்ஸில் இப்பொழுது நடக்கும் ஜப்பான் பட்டு வியாபாரம் நின்றுவிடும். பருத்தியை இந்தியாவிலிருந்தும், யுனைடட்-ஸ்டேட்ஸிலிருந்தும் வாங்கி, நெசவு செய்து ஜப்பான் பிரிடிஷ்—சாம்ராஜ்ய நாடுகளில் விற்றுக்கொண்டு வருகிறது. இந்த வியாபாரமெல்லாம் நின்றுவிடும்.

கானடாவிலிருந்தும், யுனைடட்-ஸ்டேட்ஸ் ஆதீன நாடுகளிலிருந்தும் வந்துகொண்டிருக்கும் தாமிரமும் நின்றுவிடும்.

ஆகையால், ஏற்றுமதி, இறக்குமதி என்ற இரண்டு வியாபாரங்களிலும் ஜப்பானுக்கு நஷ்டமேற்படும்.

சீனு.—டாய்-ஹு ஏரிக்கு மேற்கே 20 சங்கிங்-சைன்யங்களோடு, 180-மைல் போர்முனையில் சீனுவை எதிர்ப்பதாக ஜப்பான் சொல்லிக்கொள்ளுகிறது. 6-நாள் ஓயாது யுத்தம் செய்து மாதாங்கைத் திருப்பிப்பிடித்து விட்டதாக சீனு சொல்லிக் கொள்ளுகிறது.

கடல்-சண்டை.—வியாழக்கிழமை இரவு ஷெர்பாக் துறைமுகம் பிரிடிஷ் கப்பல்களால் எதிர்க்கப்பட்டது. பிரிடிஷ்-விமானங்களும் சேர்ந்துகொண்டன. அங்கிருந்த ஜெர்மன் கப்பல்கள் பயந்து வெளிவரவில்லை. வேவுபார்த்ததில் துறைமுகம் பழுதுபட்டதோடு, கப்பல்களும் பல சேதமாய் விட்டதாகத் தெரிகிறது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
7—10—40. (திங்கட்கிழமை.)			
	டெம்பிள்ஹாப் (Templehof) சாமான் கிடங்குகள், 3 மின்சார உற்பத்திச் சாலைகள், இன்னும் அநேக தொழிற் சாலைகள்.—பெர்லின் (Berlin) பிரதேசம்.	......	பெருந்தீ சூழ்ந்தது; அதிகச் சேதம் விளைந்தது.
	படையெடுக்க உபயோகிக்கப்படும் ஸ்தலங்கள்.—கலே (Calais)யிலிருந்து புலாயின் (Boulogne)வரை.	......	எல்லாம் சீர்குலைந்தன.
	சாமான் கிட்டங்கிகள், கப்பல்கள்.—லோரியண்ட் (Lorient) துறைமுகம்.	......	கிட்டங்கிகளில் தீப் பிடித்தன, பல கப்பல்கள் நாசமாயின.
	கப்பல்கள்.—ராட்டர்டாம் (Rotterdam), கிரேவ்லைன்ஸ் (Gravelines).	......	பல கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.
	சிறிய கப்பல்களின் கூட்டங்கள்.—டச்சு (Dutch)க் கடற்கரை.	......	......
	கப்பல்கள்.—லா ஹவேர் (Le Havre).	......	1 விமானம்.
	யுத்தக்கப்பல்கள் நிற்குமிடங்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	......
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), மான்ஹீம்(Monheim), க்ரம்பெர்க் (Gremberg).	......	......
	விமான நிலயங்கள், துறைமுகங்கள், கப்பல்கள்.—லோரியண்ட் (Lorient), செர்பார்க் (Cherbourg), டீயப் (Dieppe), கலே (Calais), புலாயின் (Boulogne), கிரேவ்லைன்ஸ் (Gravelines), டன்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend), ஸீபிரக் (Zeebrugge), ராட்டர்டாம் (Rotterdam).	......	......
	ஜெர்மன் பீரங்கிகள்.—காப் க்ரினே (Cap Grisnez).	1 விமானம்.	......

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
7—10—40.	(திங்கட்கிழமை)—தொடர்ச்சி.		
	பாக்கர் (Fokker) தொழிற்சாலை.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).	......	......
	ரயில் பாதையும், ஸ்டேஷனும்.—ஜிபுடி (Jibuti)—அடிஸ் அபாபா (Addis-Ababa) ரயில்பாதையிலுள்ள அய்ஷா (Aisha).	......	அநேக பாலங்கள் தகர்க்கப்பட்டன. போக்கு வரத்து தடைபட்டு விட்டது.
	வேவு பார்த்தல்.—ஆபிரிகாவிலுள்ள விரோதியின் நாடுகள்.	......	உபயோகப்படும் சமாசாரங்கள் உளவறியப்பட்டன.
8—10—40.	(செவ்வாய்க்கிழமை).		
	பகலில்:—துறைமுகங்கள்.—புலாயின் (Boulogne), லோரியண்ட் (Lorient).	......	......
	இரவில்:—கடற்படை நிலயங்கள்.—ப்ரமன் (Bremen), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	சேதம் அதிகமாய் இருந்தது.
	எண்ணெய் சுத்திசெய்யும் ஆலைகள்.—ஹாம்பர்க் (Hamburg), கெல்ஸன் கர்ச்சன் (Gelsenkirchen).	......	தீப்பிடித்தன.
	மின்சார உற்பத்திச்சாலை.—கீல் (Kiel).	......	சேதமாயிற்று.
	க்ருப்ஸ் (Krupps) தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen).	......	முக்கியமான கட்டடங்களில் தீப்பிடித்தது.
	உலோகத் தொழிற்சாலை.—ஹானு (Hanau).	......	......
	பாக்கர் (Fokker) விமான உற்பத்தி ஆலை.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).	......	......
	சாமான் கிடங்குகள்.—மான்ஹீம் (Monhiem), கெம்பர்க் (Gemburg).	......	தீப்பிடித்தன.
	விரோதி நாடுகளில் உள்ள பல விமான நிலயங்கள்.	......	சேதமாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
8—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	படையெடுக்க உபயோகப்படும் ஸ்தலங்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (Channel) பிரதேசம்.	......	எங்கும் படுசேதம்.
	தரையில் இருக்கும் விமானங்கள்.–பார்டியா (Bardia).	......	அவைகளின் மேல் குண்டு விழுந்தது.
	துருப்புகள் தங்குமிடங்கள், கட்டடங்கள்.–ஸோலம் (Sollum).	......	நாசமாயின.
	துறைமுகங்கள், சைன்யங்கள் வசிக்கும் இடங்கள், மராமத்து செய்யும் இடங்கள்.—அஸாப் (Assab) 3 தரம்.	......	ஒரே ஜ்வாலை மயமாய் இருந்தது.
	பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—எல்வாக் (Elwak).		
	வேவு பார்த்தல்.—ஆபிரிக்காவில் விரோதியின் பிரதேசங்கள்.	நஷ்டமில்லை.	......
9—10—40. (புதன்கிழமை).			
	பகலில்.—எண்ணெய் ஆலை.—ஹாம்பர்க் (Hamburg).	......	தீப்பிடித்தது.
	சிறிய கப்பல்கள், பாலங்கள்.—(ஒரு கால்வாய் பிரதேசத்தில்) அன்னு பௌலோனு (Anna Paulowna).	......	சேதமாயின.
	ரயில் வண்டிகள் நிறுத்தி வைக்கப்படும் இடங்கள்.–வேரன்டார்ப் (Warendorf), ஹாம்பர்க் (Hamburg).	......	......
	விமான நிலயம்.—டெக்ஸல் (Texel).	......	......
	கப்பல்கள்.—லா ஹவேர் (La Havre), இன்னும் இங்கிலீஷ் கால்வாயிலிருக்கும் மற்ற துறைமுகங்கள்.	...... 1 விமானம்.	....
	இரவில்.–ஒரு எண்ணெய் ஆலை, துப்பாக்கி மருந்து செய்யும் ஆலைகள்.–கொலோன் (Cologne).	......	தீப்பிடித்தன.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
9—10—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	அலுமினியம் (Aluminium) தொழிற்சாலை.—க்ரேவன்ப்ராயாச் (Gravenbroich).	......	வெடிச் சத்தமும், தீயும் கிளம்பின.
	க்ருப்ஸ் (Krupps) தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen).	......	தீப்பிடித்தெரிந்தது.
	மின்சார உற்பத்திச் சாலை.—ரீஷால்ஷ் (Reischolz).	......	......
	ரயில் பாதைகள், சாமான் கிடங்குகள்.—கொலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf), வீஸெல் (Wesel) ப்ரஸ்ஸெல்ஸ் (Brussels).	......	அதிகச்சேதம்.
	சானல் (Channel) துறைமுகங்கள்.—ஆம்ஸ்டர்டாமி (Amsterdam)லிருந்து லா ஹவேர் (La Havre) வரை.	......	......
	கப்பல்கள், மராமத்து செய்யும் இடங்கள்.-ப்ரஸ்ட் (Brest).	1 விமானம்.	விரோதியின் நாசகாரிகளின் மேல் குண்டு விழுந்தது.
	3 விரோதி சர்மான் கப்பல்கள்.—மாஸ் (Mass) நதி.	......	......
10—10—40. (வியாழக்கிழமை).			
	எண்ணெய்த் தொட்டிகள்.—ஹாம்பர்க் (Hamburg), ஹானோவர் (Hanover), ரீஷால்ஷ் (Reischolz), கெல்ஸன் கர்ச்சன் (Gelsenkirchen), கொலோன் (Cologne), மாக்டீபர்க் (Magdeburg), லூனா (Leuna).	......	தகர்க்கப்பட்டது. எங்கும் தீ மூண்டது.
	யுத்தக் கப்பல்கள்.—வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), துறைமுகம்.	......	ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.
	க்ருப்ஸ் (Krupps) கப்பல் கட்டுமிடம்.—கீல் (Kiel).	......	தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
10—10—40.	(வியாழக்கிழமை)—தொடர்ச்சி.		
	கப்பல்கள்.—கலே (Calais), புலாயின் (Boulogne), டென் ஹெல்டர் (Den Helder), லா ஹவேர் (La Havre), ப்ரஸ்ட் (Brest), ப்ளஷிங் (Flushing), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam) துறை முகங்கள்,	......	பல கப்பல்கள் மூழ்கின.
	கடற்கரையில் அமைத்திருக்கும் பீரங்கிகள்.—செர்பார்க் (Cherbourg).	......	தகர்க்கப்பட்டன.
	பாக்கர் (Fokker) தொழிற்சாலை.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).	......	
	தொழிற்சாலைகள்.—பொட்ராப் (Bottrop).	......	
	உலை.—ஆபர்ஹாஸன் (Oberhausen).	......	
	ரயில் பாதைகள்.—ஸோயஸ்ட் (Soest), ஹாம் (Hamm), கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen).	......	சேதமாயின.
	விமான நிலயங்கள்.—டீகூய் (Dekooy), க்ளாப்பன்பர்க் (Kloppenburg), ப்ரமனுக்(Bremen)-க்கு தென்மேற்கு பாகம், ஆஸ்தீம் (Ostheim).	......	நாசமாயின.
	கடல் விமான நிலயம்.—நார்டர்னி (Norderney).	நஷ்டமில்லை.	2 விமானங்கள்.
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பென்காஸி (Benghazi).	......	சாமான் கிடங்குகள், கப்பல் கட்டுமிடங்கள் சேதமாயின.
	கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk) துறை முகம், அஸாப் (Assab), மாய் அடாகா (Mai Adaga), ஜுரா (Jura).	......	கட்டடங்கள் இடிந்தன.
	மோட்டார் வண்டிகள்.—டெஸ்ஸி(Dessie) அஸாப் (Assab) பாதை.	......	
	சாமான் கிடங்குகள், சைன்யங்கள் வசிக்குமிடம்.—ராஸ் காரிபாலே (Ras Caribale).	......	

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
11—10—40. (வெள்ளிக்கிழமை).			
	எண்ணெய் ஆலைகள், தொழிற்சாலைகள், கப்பல் நிற்குமிடங்கள்.—கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg), ப்ரமர்ஹாவன் (Bremerhaven), வீஸர்மாண்ட் (Wesermaunde), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	தீ ஜ்வாலை கொழுந்து விட்டு எரிந்தது.
	விமான நிலயங்கள்.—டீகூய் (Dekooy) டெக்ஸல் (Texel), நார்டர்னி (Norderney), வாங்கிரூக் (Wangerook) டென்ஹெல்டர் (Denhalder), ஸில்ட் (Sylt) முதலிய டச்சு (Dutch), ஜெர்மன் (German) கடற்கரைத் தீவுகள்.	......	அதிக நஷ்டம். அநேக இடங்களில் தீப்பிடித்தது. 1 சுழல் விமானம்.
	படையெடுக்க உபயோகப்படும் ஸ்தலங்கள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), ஆஸ்டெண்ட் (Ostend), கலே (Calais), புலாயின் (Boulogne), லாட்ரபாட் (Letrepot).	...... நஷ்டமில்லை.	வெடிச் சத்தமும் தீயும் கிளம்பின.
	துறைமுகங்கள்.—பென்காஸி (Benghazi) டொப்ரூக் (Tobruk).	......	
	வேவுபார்த்தல்.—லிபியா (Libya).	......	
	விமான நிலயங்கள்.—அஸ்மாரா (Asmara) கூரா (Gura), மாய் அடாகா (Mai Adaga) இன்னும் அபிஸீனியா (Abyssinia), இதாலிய ஸோமாலிலாண்டு (It. Somaliland) இவைகளிலுள்ள மற்ற இடங்கள்.	......	பல இடங்களில் தீப்பிடித்தது.
12—10—40. (சனிக்கிழமை).			
	மின்சார உற்பத்திச்சாலை, தொழிற்சாலைகள், ஒரு முக்யமான சாமான் கிடங்கு, இன்னும் மற்ற ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பெர்லின் (Berlin).	......	எங்கும் தீப்பிடித்தது அதிகச் சேதம், போக்கு வரத்து சாதனங்கள் தடைபட்டன.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
12—10—40.	(சனிக்கிழமை)—தொடர்ச்சி.		
	அலுமினியம் (Aluminium) தொழிற் சாலை.—ஹெரிங்கன் (Heringen).	......	சேதமாயிற்று.
	மின்சார உற்பத்தி ஆலை.—வால்டெக் (Waldeck), விரோதி ஆக்ரமித்திருக் கும் பிரான்ஸ் (France)		
	குருப்ஸ் (Krupps) தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen).	......	பெருந்தீ மூண்டது.
	உலை.—டோர்கா (Torgau)		
	உலோகத்தொழிற் சாலைகள், பாக்கர் (Fokker) விமானத்தொழிற் சாலை.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).	......	நாசமாயின.
	எண்ணெய் ஆலைகள்.—கொலோன் (Cologne), ஹானோவர் (Hanover).	......	தீப்பிடித்தன.
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), கொலோன் (Cologne).		
	டார்ட்மண்ட் (Dortmund)—எம்ஸ் (Ems) கால்வாய்.	......	போக்குவரத்து நின்று விட்டது.
	பல விரோதி விமான நிலயங்கள் பீரங்கி கள்.—காப் க்ரிநே (Cap Grisnez).		
	துணைக்காவல் கப்பல்கள்.—நார்வே (Nonwegian) கடற்கரைக்கப்பால்.	நஷ்டமில்லை.	1 கப்பல் சேத மாயிற்று.
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பார்டியா (Bardia).	......	சைன்யங்கள் வசிக்கு மிடத்தில் குண்டு கள் விழுந்தன.
	தரையில் இருக்கும் விமானங்கள்.—எல் ஆடம் (El Adem).	......	பலத்தசேதம்.
	கட்டடங்கள்.—டெர்ணு (Derna).	......	சேதமாயின.
	கப்பல்கள் துறைமுகம்.—டொப்ருக் (Tobruk).	......	புகையும், தீயும் கிளம்பின.
	விமான நிலயங்கள்.—அஸ்மாரா (Asmara), கூரா (Gura).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
13—10—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	துறைமுகங்கள்.—ஹாலந்தி (Holland) லுள்ள ப்ளஷிங் (Flushing), டோம்பர்க் (Domberg), ஸீப்ரக் (Zeebrugge).	......	எங்கு பார்த்தாலும் ஒரே தீமயம்; பலத்தசேதம்.
	கடற்படை நிலயங்கள், கப்பல்கள்.—கீல் (Kiel), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	பல கப்பல்கள் சேதமாயின.
	ப்ளோம் (Blohm), வோஸ் (Voss) கப்பல் கட்டுமிடங்கள்.-ஹாம்பர்க் (Hamburg).		
	தார் உண்டாக்கும் ஆலை.—டுயிபர்க் (Duisburg).		
	க்ருப்ஸ் (Krupps) தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen).		சேதமாயிற்று.
	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—மேற்கு ஜெர்மனி (Germany,) ரூர் (Ruhr) பிரதேசம்.		
	விமான நிலயங்கள்.-வோயன்ஸ்(Woens), டார்ட்ரக்ட் (Dordrecht), டெக்ஸல் (Texel).		
	பீரங்கிகள்.-போர்கும் (Borkum), டெர்ஸ் செல்லிங் (Terschelling) தீவுகள்.		
	கடல் விமான நிலயம்.—நார்டர்னி (Norderney).		நாசமாயிற்று.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
8—10—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில் :—லண்டன் (London), தென் கிழக்கு இங்கிலாந்து (England).	......	சொற்பச் சேதம்; சிலருக்குத்தான் காயம்.
	பிற்பகலில் :—கெண்ட் (Kent) கடற்கரையில் உள்ள பட்டணங்கள், ஸஸ்ஸெக்ஸ் (Sussex), இங்கிலீஷ் கால்வாய் (English Channel).	......	வீடுகளும், கட்டடங்களும் இடிந்தன. சிலர் மாண்டனர்,

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
8—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	மாலையிலும் இரவிலும்:—பல தெற்கு, தென்மேற்குப் பட்டணங்கள், லண்டன் (London), தென்கிழக்கு இங்கிலாந்து (England), லிவர்பூல் (Liverpool),	8 விமானங்கள்.	பல இடங்களில் தீப் பிடித்தது. ஆனால் உடனே அணைத்து விட்டார்கள். லிவர் பூரில் குண்டுகள் விழவில்லை. 2 விமானங்கள்.
	ஏடன் (Aden), மால்டா (Malta) ...	......	......
9—10—40. (புதன்கிழமை).			
	பகலில்:—கிழக்கு ஆங்கிலியன் (Anglian) கடற்கரை, தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், தென்கிழக்கு கடற்கரை மிட்லண்ட்ஸ் (Midlands), லண்டன் (London).	......	சில கட்டடங்கள் சேதமாயின முக்யமான சேதம் ஒன்றும் இல்லை. சிலருக்குக் காயம்.
	இரவில்:—லண்டன் (London) அதன் சுற்றுப்புறங்களும், இங்கிலாந்தி (England)ன் தெற்கு, தென்மேற்கு, தென்கிழக்குப் பாகங்கள்.	......	சேதம் அதிகமில்லை. காயம்பட்டவர்கள் சொற்பந்தான்.
	தென் வேல்ஸ் (Wales) ..	4 விமானங்கள்.	1 விமானம்.
10—10—40. (வியாழக்கிழமை).			
	பகலில்:—தென்கிழக்கு இங்கிலாந்து (England).	......	லண்டனை ஒரு விமானமும் அணுக முடியவில்லை.
	கெண்டி (Kent)ல் அநேக இடங்கள் ...	......	சேதமில்லை.
	ஸஸ்ஸெக்ஸ் (Sussex), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.		காயம்பட்டவர்களும் சொற்பந்தான்.
	இரவில்:—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரத்திலிருந்து வெஸ்ட் கண்ட்ரி (West country), வேல்ஸ் (Wales), மிட்லண்ட்ஸ் (Midlands), லிவர்பூல் (Liverpool), வடகிழக்கு இங்கிலாந்து (England), லண்டனி (London)ன் சுற்றுப்புறங்கள்.	5 விமானங்கள்.	சில இடங்களில் தீப் பிடித்தது; உடனே அணைக்கப்பட்டு விட்டது. சிலர் மாண்டனர். 5 விமானங்கள். 2 விமானிகள் உயிர் தப்பினர்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
11—10—40. (வெள்ளிக்கிழமை)			
	காலையில்:—கிழக்கு ஆங்கிலியா (Anglia), தென்கிழக்கு இங்கிலாந்து (England).	......	லண்டனருகில் ஒரு விமானமும் வர முடியவில்லை.
	பகலில்:—பல இடங்கள் கெண்ட் (Kent), எஸ்ஸெக்ஸ் (Essex), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், டார்ஸெட் (Dorset) கடற்கரை.	......	சொற்பச்சேதம். சிலர் கொல்லப்பட்டனர். விரட்டியடிக்கப்பட்டன.
	இரவில்:—லண்டன் (London) பிரதேசம் வேல்ஸி (Wales)லும், ஸ்காத்லாந்தி (Scotland)லும் சில இடங்கள். மர்ஸிஸயிட் (Merseyside), வாஜீர் (Wajir).	...... 8 விமானங்கள்.	சிலருக்குக் காயம் ஆனல் சேதம் சொற்பந்தான். 9 விமானங்கள், 6 விமானிகள் பத்திரம்.
	கென்யா (Kenya)வில் லோட்வார் (Loadwar) பிரதேசம்.		சேதமில்லை.
12—10—40 (சனிக்கிழமை).			
	காலையில்.—லண்டன் (London) பிரதேசம், கெண்ட் (Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex).	......	சேதம் மிகவும் சொற்பந்தான்.
	பிற்பகலில்.—ஹேஸ்டிங்ஸ் (Hastings), லண்டனி(London)ன் சுற்றுப்புறங்கள்.	......	......
	இரவில்.—லண்டன்(London) பிரதேசம், மிட்லண்ட்ஸி (Midlands)-ல் சில ஜில்லாக்கள், தெற்கு, தென் கிழக்கு இங்கிலாந்து (England).	...... 11 விமானங்கள்	சில இடங்களில் தீப்பிடித்தது. சிலருக்குத்தான் காயம். 10 விமானங்கள்; 7 விமானிகள் உயிர் தப்பினர்.
13—10—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	காலையில்.—லண்டனி (London)-ன் சுற்றுப்புறங்கள், தென்கிழக்கு இங்கிலாந்து (England), கெண்ட் (Kent) கடற்கரை.	......	மிகவும் சொற்ப சேதம். சிலருக்குக் காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
13—10—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், லிவர்பூல் (Liverpool), ஒரு வடகிழக்குப்பட்டணம். ஏடன் (Aden).	...... 2 விமானங்கள்	சொற்ப சேதம். சிலர் மாண்டனர். 2 விமானங்கள். ஒருவருக்கும் காயமில்லை. சேதமும் இல்லை
14—10—40 (திங்கட்கிழமை).			
	பகலில்.—பல இடங்கள்—தென் இங்கிலாந்து (England), மிட்லண்ட்ஸ் (Midlands), ஹோம் கவுண்டீஸ் (Home Counties), கிழக்கு ஆங்கிலியா (Anglia), ஸ்காத்லாந்து (Scotland).	......	சில வீடுகள் இடிந்து போயின. சிலருக்குக் காயம். சிலர் இறந்தனர்.
	இரவில்.—லண்டன் (London), பிரதேசம், ஒரு மிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணம்.	......	சில இடங்களில் தீப்பிடித்தது; ஆனால் சீக்கிரம் அணைத்து விட்டார்கள். சேதம் சொற்பந்தான்.
	சில இடங்கள்.—ஹோம் கவுண்டீஸ் (Home Counties), தென் கிழக்கு இங்கிலாந்து (England), வேல்ஸ் (Wales).	......	

அனுபந்தம் V.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

24—9—40.

ஜெர்மனி, நேற்று ஒரு பெரிய பொய்யைக் கட்டிவிட்டது. இந்தப் பொய்யை யாவரும் எளிதில் அறியமுடியும். பொய்யோடு உளரலும் சேர்ந்திருக்கிறது. பிரிடிஷ்-விமான-சேனபதி சொன்னதாக ஆங்கிலத்திலும், விமான-மந்திரி சொன்னதாக இந்துஸ்தானியிலும் ஒலிபரப்பியிருக்கிறது. இது உளரல். "ஜெர்மனியில், ராணுவ-நிலயங்களை எதிர்த்து அலுத்துப் போய்விட்டது. இனி ஊர்-ஜனங்கள்மேல் குண்டு போடவேண்டியதுதான்" என்று சேனபதி சொன்னாராம். "இனி ஜெர்மனியிலிருக்கும் ராணுவ-நிலயங்களை எதிர்க்கப் போவதில்லை: நகரங்களைத்தான் , தாக்கப் போகிறோம்" என்று மந்திரி சொன்னாராம்.

இவ்விரண்டு வாக்கியங்களும் பொய். பிரிடனில் நிர்வாகம் வகிக்கும் ஒருவராவது இப்படிச் சொல்லவில்லை. ஆனால் ஜெர்மனி இம்மாதிரி யுத்தத்தை பிரிடனில் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, வெள்ளிக்கிழமை, இந்துஸ்தானியில் செய்த ஒரு ஒலிபரப்பில், பிரிடனை மற்றொரு முறை படையெடுக்கும்போது தாக்ஷண்யமில்லாது, கண்டவிடங்களில் குண்டுகளை வீசப்போவதாக ஒலிபரப்பிற்று. இதை மறைக்கவும், இந்தப் பழியைப் பிரிடன் மேற் சுமத்தவும் இந்த யுக்தி செய்திருக்கலாம்.

25—9—40.

சர்ச்சில் போகும் இடங்களில் எல்லாம் பஞ்சம் தாண்டவமாடுகிறது. ஜனங்கள் பசியால் வருந்துகிறார்கள். சண்டை நீடித்தால், பசி முத்தி பட்டினியாய் முடியும்: சரீரத்தில் எலும்புதான் மிஞ்சும்' என்று அலங்காரமாய் வர்ணித்து ஜெர்மனி பயமுறுத்துகிறது. இது எல்லாம் உண்மையில் ஸெப்டம்பர் 25-ல், பிரிடிஷ்-உணவு-இலாகா-மந்திரி சொல்லியபடி 'இப்பொழுது வேண்டிய உணவும், இனி வேண்டிய உணவும் போதுமான அளவு பிரிடனில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

'மத்தியதரைக்கடலில் பிரிடிஷ்-கப்பல் படையை அடைத்துப் பூட்டி விட்டோமல்லவா?' என்று இதாலி கர்வமாய்க் கேட்கிறது. இதற்கு எதிரிடையாக, அதே தேதியில், ஜெர்மனி, 'மத்தியதரைக்கடலை (ஜிப்ரால்டரை) விட்டு, தென்மேற்குத் திக்கை நோக்கி, பிரிடிஷ்-கடல்-படை புறப்பட்ட செய்தி ஸ்பெயினிலிருந்து வந்திருப்பதாக, ஒலிபரப்பிற்று.

'அடக்கு முறைகளையும், பயங்கர முறைகளையும் கைக்கொள்ளாது இதாலிய-அரசு நாகரீகத்தைப்பரவச்செய்கிறது', என்று இதாலிய மந்திரி பிரசுரம் செய்கிறார். இதே காரியத்தை நிறைவேற்றத் தானும் பிரதிக்ஞை செய்து கொண்டிருப்பதாக ஜெர்மனி ஒத்து ஊதுகிறது. ஆனால் இவைகள் உண்மைக்கு விரோதமாய் இருக்கின்றன. உதாரணமாக "வாய் வார்த்தையெல்லாம் சர்க்கரைதான். அடியாத மாடு படியாது. காரியம் நடக்க வேண்டுமானால், வெறும் வார்த்தைகளைவிட, துப்பாக்கி, யந்திர-பீரங்கி, யுத்தக்கப்பல், விமானம், பீரங்கி, அதிக உபயோகம்" என்று முஸோலினி 1930, மே 17-ல் பேசியிருக்கிறார்.

'சிருஷ்டியைவிட ஸம்ஹாரம் பெரிது' என்று ஜெர்மன் ஒலிபரப்பும் முஸோலினிக்கு ஒத்துப் பாடியிருக்கிறது. இவைகளையெல்லாம் மறந்து, இப்பொழுது, பயங்கர முறைகளை அனுஷ்டிக்கவில்லையென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

20,000—25,000 அடி உயரத்தில் பிரெஞ்சு விமானங்கள் ஜிப்ரால்டர் மீது சில தினங்களுக்குமுன் பறந்துவந்தன. அப்படியிருக்க இந்த விமானங்கள், வெகு கீழே (அதாவது எதிர்க்க நினைத்த ராணுவ ஸ்தலங்களுக்குச் சமீபத்தில் பறந்ததாக இதாலி வர்ணிக்கிறது. 20,000 அடி உயரம் வெகு சமீபம் போல் இருக்கிறது. இதிலிருந்து 20,000 அடிக்கு கீழ்வர இதாலிய-விமானங்கள் பயப்படுகின்றனவென்பது தெரிந்துவிட்டது.

26—9—40.

முன் பின் தாறுமாறாய்ப் பிரசாரம் செய்வதே ஜெர்மன்-ஒலிபரப்பின் ஸ்வபாவமாய்ப் போய்விட்டது. ஜெர்மன்-ஒலிபரப்புக்கு இது ஒரு தீராப்பிணி என்றே சொல்லலாம். இந்தப் பேத்தலுக்கு மௌனம் சாதிப்பது மேன்மையாய் இருக்கும். வெளி-நாட்டுக்குப் போகும் பிரிடிஷ் பிரயாணிகளடங்கிய 'ஸிடி ஆப் பனாரிஸ்' கப்பல் அமிழ்த்தப்பட்டது. இந்தக் கப்பல் உடையவேயில்லை என்று முதல் நாள் சொல்லிவிட்டு, மறுநாள், ஜெர்மனி, இது பிரதானக் கப்பல் இல்லை, துணைக்கப்பல்தான் என்று மாற்றி விட்டது. மேலும், வேலிக்கு ஓணான் சாக்ஷி யென்பதுபோல, இந்தப் பொய்க்கு நியூயார்க் ஸன் என்ற பத்திரிகை சாக்ஷி. இந்தப் பத்திரிகை ஜெர்மன் கக்ஷியைச் சேர்ந்ததென்பது உலகம் அறிந்த விஷயம்.

ஸ்பெயினானது ஜெர்மனியோடும் இதாலியோடும் சேர்ந்துகொண்டு, சகாயம் செய்யுமென்று சொல்லப்படுகிறது. ஆசைக்கொரு அளவில்லை. முட்டையில் இருந்து வெளிவருமுன்னே குஞ்சுகளைக் கணக்கிடும் மூடத்தனமாயிருக்கிறது. ஸ்பெயின் மந்திரி-ஸீனர் ஸுனரை, ஹிட்லர் மிகவும் பலவந்தப் படுத்தியதாகத் தெரிகிறது. ஆனாலும் தன் லாபத்தைத்தான் ஸ்பெயின் தலைவரான பிராங்கோ பார்த்துக் கொள்வாரே ஒழிய ஊர் வம்புகளுக்குப் போகமாட்டார்.

ஜெர்மன்—ஒலிபரப்பு (ஹா—ஹா) சொல்லுகிறபடி பார்த்தால் சர்ச்சில் செய்திருக்கும் குற்றங்களுக்குக் கணக்கில்லை :—'அதீனியா' 'ஸிடி ஆப் பனரிஸ்' என்ற பிரிடிஷ் கப்பல்களையும், 'மெக்னிஸ்' என்ற பிரெஞ்சுக் கப்பலையும் இவரே உடைக்கச் சொல்லிவிட்டாராம், முயூனிச் சாராய மண்டபத்தி (Beer-Hall) லும், பக்கிங்ஹாம் அரண்மனையிலும் வெடிகளைப்போட்டு இவரே உடைக்கச் சொன்னாராம்; இப்பொழுது, சும்மாயிருக்க முடியாமல், டாகாரையும் எதிர்க்கச் சொன்னாராம்; இது தேச சரித்திரத்திலே குற்றங்களுக்கெல்லாம் பெரிய குற்றமாகுமாம்.

27—9—40.

'ஜெர்மனி சொல்லுவதெல்லாம் உண்மையென்பது இப்பொழுது உலகம் அறிந்த விஷயம்' என்று அடிக்கடி ஒலிபரப்பப்படுகிறது. 'ஜெர்மானியர்களின் மேன்மையைப் பற்றியும், ஜெர்மன்—அரசாங்கத்தின் பெருமையைப்பற்றியும் இப்பொழுது பிரசாரம் நடக்கிறது. ஜெர்மனியானது ராம—ராஜ்யமாய் விட்டதாம். "ஜனங்கள் நிர்ப்பயமாய் ஜீவிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் தங்க ஒரு இடமும், ஒவ்வொரு குழந்தைக்கும் சாப்பாடும், படிப்பும், கவர்ன் மெண்டால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏழைகளுக்கு ஒருவிதமாகவும், பணக்காரர்களுக்கு மற்றொரு விதமாகவும், இந்த ராஜ்யத்தில் நடக்காது. விருத்தாப்பியர்களையும், அரசாங்கம் காப்பாற்றும்; பிறர் கையைப் பார்க்க வேண்டியதில்லை. தொழிலாளிகள் தங்கள் குடும்பத்துக்கு உழைப்பதோடு, தேசத்துக்காகவும் உழைத்து, ஸர்வ ஜனங்களும் முன்னைக்காட்டிலும் அதிக சுகத்தோடு வாழ, பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்கிறார்கள். இதனால் ஜெர்மன் தொழிலாளிகளுக்கெல்லாம் சந்தோஷமும், பெருமையும் ஏற்பட்டிருக்கிறது!" என்றெல்லாம் ஜெர்மனி தன்னை ஸ்தோத்திரம் செய்து ஒலி பரப்பிக்கொள்ளுகிறது.

ஆனால், ஜெர்மனியில் உள்ளபடி நடப்பது பின்வருமாறு :—

ஜெர்மானியர் ஒவ்வொருவரும், எவராயிருந்தாலும், கட்டாயமாக, ஏதாவது ஒரு தொழிலைச் செய்யவேண்டுமென்ற சட்டம் ஜெர்மனியில் முதன் முதல் 1938-ல் அமுலுக்கு வந்தது. ராஜீய—க்ஷேமத்துக்கு வேண்டிய விதமாக தொழிலாளர்களுக்குத் தொழில்களைப் பிரித்துக் கொடுக்க அதிகாரிகள், (1939 பிப்ரவரியில் பிறந்த மற்றொரு சட்டப்படி) நியமிக்கப்பட்டார்கள். போர் முனையில் நிற்கும் சிப்பாய்களைப் போல, தொழிலாளிகளும் ஏவப்பட்டார்கள்.

ஏற்கனவே, கொத்து வேலை செய்யும் தொழிலாளிகளின் கூலி ரேட்டுகள் நிர்ணயிக்கப் பட்டிருந்தன. சென்ற ஜூன் மாதத்தில், மற்றத் தொழிலாளர் களுக்கும், இதேமாதிரி, கூலி நிர்த்தாரணம் செய்யப்பட்டது. இந்த ரேட்டுகள் கெட்டிக்காரத் தொழிலாளிகளுக்கு ஏற்படுத்திய விகிதங்களாகும். வேலைக்காரர் களுடைய சாமார்த்தியம் வேலை கொடுப்பவர்கள் மதிப்புக்குட்பட்டதென்று

சட்டம் செய்து விட்டபடியால் முதலாளிகள் அநேக வேலைக்காரர்களுக்கு, வேலை சரிவரத் தெரியவில்லையென்ற சாக்குச் சொல்லி, கூலியைக் குறைத்து விட்டார்கள். வேலை செய்யும் மணிக்கணக்கும் அதிகப்படுத்தப்பட்டது. ரஜா நாட்களிலும் வேலை செய்யச் சொல்லப்பட்டார்கள்: ஆனால் கூலியை உயர்த்தவில்லை. ஹாம்பர்க் துறைமுகத்தில் வேலை செய்துகொண்டிருந்த 2,500 வேலைக்காரர்களைக் கோட்டைகள் கட்ட வேறு இடங்களுக்கு அனுப்பிவிட்டதிலிருந்து, அங்கு மிஞ்சினவர்கள் வாரத்துக்கு 80 மணி நேரம் வேலை செய்ய நேரிட்டது.

இப்பொழுது, நோயாளிகள்கூட வேலை செய்யச் சொல்லப்படுகிறார்கள். பொதுவாக, அதிக வேலை கொடுப்பதால் தொழிலாளிகள் களைத்துப் போகிறார்கள். வேலைக்காரர்கள், பலவந்தமாக, ஊர் விட்டு ஊர் மாற்றப்படுவதால், அவர்கள் குடும்பத்தார்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. "ஜெர்மன் வாலிபர்கள் வாயைத் திறக்காது, ஆக்ஷேபிக்காது சரியானாலும், சரியில்லாமலிருந்தாலும் உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று ஹிட்லர் மைன் காம்பில் உபதேசம் செய்திருக்கிறார். இது அனர்த்தமாய் முடிந்திருக்கிறது. வாயைத் திறக்காமல், ஓசைப்படாமல் வாலிபர்கள் அக்கிரமங்களைச் செய்கிறார்கள். இவைகளை நிறுத்த, 18 வயதுக்குட்பட்ட வாலிபர்களும், சிறுமிகளும், தெருக்களில், தனித்து இரவு 8 மணிக்குப் பிறகு போகக் கூடாதென்று சமீபத்தில் உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சிறுவர் சிறுமிகளின் நடத்தை மிகவும் கெட்டுப் போய்விட்டது. 1939 செப்டம்பரிலிருந்து களவுக்காக 4,682 வாலிபர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். குடி-வெறி, சச்சரவு, வஞ்சனை, ஏய்ப்பு முதலிய பித்தலாட்டங்களுக்காக 11,000 பெண்களும், பையன்களும் விசாரணை செய்யப்பட்டிருக்கிறார்கள்; சாப்பாட்டுச்-சீட்டு (Ration-cards) களையும், உணவு, வஸ்திரம் இவைகள் சம்பந்தமாயும் பித்தலாட்டம் செய்ததற்காக பெர்லின் நகரத்தில் மட்டும் 31,000 வாலிபர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக, ஜெர்மனியில் குற்றவாளிகள் இப்பொழுது மிகவும் அதிகமாய் விட்டார்கள்.

28—9—40.

செப்டம்பர் 27-ம் தேதியன்று ஜெர்மனியிலாவது, அது பிடித்திருக்கும் நாடுகளிலாவது பிரிடிஷ்-விமானங்கள் படையெடுக்கவில்லையென்று ஜெர்மன்-ஒலிபரப்புச் சொல்லுகிறது. ஆனால் அன்றுமாலை பெர்லின் இரண்டு தடவைகள் எதிர்க்கப்பட்டது: அதோடு, ஹானனிலும், டஸல்டார்பிலும், வழக்கம்போல் (ஜெர்மானியர் பிரிடனைப்படையெடுக்க உத்தேசித்திருக்கும்) துறைமுகங்களிலும் அன்று, விமான-எதிர்ப்புகள் நடந்தன. ஜெர்மனி சொல்லுகிறபடி, பிரிடிஷ்-விமானங்கள் ஜெர்மனிக்குள் வரவில்லையென்றால், ஜெர்மன்-விமானங்களே, ஜெர்மனியைத் தகர்த்திருக்கவேண்டும்.

29—9—40.

களைக்கட்டி ஒலிபரப்புவதில் ஹா-ஹா (ஜெர்மன்) பிரபு என்பவர் சாமர்த்யம் உள்ளவர். இவர், பிரிடிஷ் சண்டைக் கப்பல்கள் உடைந்து விட்டதாக அடிக்கடி கற்பனை செய்து சொல்லுவார். அதேமாதிரி டாகார் சண்டையில் அநேக பிரிடிஷ் கப்பல்கள் அமிழ்த்தப்பட்டதாக இப்பொழுது சொல்லுகிறார். ஆனால் அவைகளின் பெயர், பாரம் (tonnage) முதலிய விவரங்களைக் கொடுக்கவில்லை. அதோடு, மூன்று பிரிடிஷ்-விமானங்கள் நஷ்டமாய்ப் போனதாகவும், சொல்லுகிறார். கப்பல்களும் உடையவில்லை, விமானங்களும் போகவில்லை.

ஆனால், தான் சொல்லுவதையெல்லாம் நம்பவேண்டுமென்றும் அவர் சொல்லவில்லை. "சென்றவாரத்தில் ராஜ்யங்களுக்குள் ஏதோ பெரிய பேச்சுகள் நடக்கப் போவதாக நான் சொன்னதுண்டு. அதிலிருந்து ஏதோ பெரிய காரியங்கள் நடக்கப் போவதாக நினைத்திருக்கக் கூடாது. இதிலிருந்து ஏற்பட்ட ஏமாற்றம் அவர்களுக்கு ஒரு தண்டனைபோல் ஆகும்?" என்று ஹா-ஹா ஒலிபரப்பினார். வாஸ்தவம்தான். இவரை நம்புவது மோசம்தான்.

30—9—40.

'சனிக்கிழமை அன்று பட்டப்பகலில், சூரியன் நன்றாய் பிரகாசித்துக் கொண்டிருந்த சமயத்தில் கூட்டம் கூட்டமாக ஜெர்மன்-விமானங்கள் லண்டன் நகரத்தின் மத்திய பாகத்தைத் தாக்கின,' என்று ஜெர்மனி ஒலிபரப்பியிருக்கிறது. அன்று சூரியன் நன்றாய் பிரகாசித்தது உண்மையே; ஆனால் லண்டனுக்குள் ஒரு விமானங்கூட வரவில்லை.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

"ஹைபாவில் நடந்த விமான-எதிர்ப்பில் முஸ்லிம் ஒருவரும் கொல்லப்படவில்லை" என்று இதாலிய-ரேடியோ சொல்லுகிறது. உள்ளபடி, இந்த விமான-எதிர்ப்பில் 32 அராபியர்கள் இறந்தார்கள்: 68 பேர்களுக்குக் காயம். 100-க்கு 99 பேர்கள் முகமதியர்களாயிருக்கும் ஊரில் குண்டுகளைப் போட்டால், முகமதியர்களிறக்காது வேறு யார் இறந்திருக்கக்கூடும்? இந்த லக்ஷணத்தில் அராபியர்களை முஸோலினி நேசிப்பதாகத் துண்டுப் பத்திரிகைகள் விமானங்களிலிருந்து போடப்பட்டனவாம்.

26—9—40.

எகிப்த் பார்லிமெண்டு தலைவரும், 'ஸாடிஸ்ட்' கக்ஷித் தலைவருமான அக்மத்-அமீர் பாஷாவும், எகிப்த் பிரதம-மந்திரி ஹாஸான்-ஸப்ரி-பாஷாவும் பிரிடனிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு, பிரிடனிட்ட ஏவலைச் செய்கிறார்களென்றும், ஃரூக் அரசர்கூட பிரிடிஷ்-ஸ்தானிகர் பித்தலாட்டத்துக்கு உட்படுகிறார் என்றும் இதாலி ஒலிபரப்புகிறது.

இதற்கு விரோதமாக பருக் அரசர் பிரிடிஷ்-ஸ்தானிகரை அலக்ஷியம் செய்வதாகவும் சொல்லுகிறது.

28—9—40.

அராபியர்கள் பிரிடன் மேல் மதப்-போர் செய்யச்சொல்லி மகமதியத்தலைவர்கள் உபதேசம் செய்வதாக ஜெர்மனி சொல்லுகிறது. பிரிடனுடைய தூண்டுதல் மேல் சில இந்திய-முஸ்லிம்கள் இதாலிமேல் மதப் போர் செய்ய உபதேசிப்பதாக இதாலி ஒலிபரப்புகிறது. இரண்டு ஒலிபரப்புகளும் உண்மையல்ல. இந்திய-முஸ்லிம்கள் இதாலிமேல் படையெடுக்கச் சொல்லவேயில்லை. 'மதப்போர்கள் ஏற்பட்டு 700 வருஷங்களாய் விட்டன. இதாலி எகிப்தில் ஆக்கிரமிப்பதிலிருந்து இனி எல்லா முஸ்லிம்களும் சேர்ந்து இதாலிமேல் மதப் போர் செய்யவேண்டியது தான்' என்று ஸெப்டம்பர் 23-ம் தேதியன்று 4-மணி சாவகாசம் முல்லா-ஸாஹிப்-பூடான் உபந்யாஸம் செய்தார். இவர் பிரிடிஷ் அதிகாரத்துக்குட்பட்டவரல்ல. 'டைரா' என்கிற சுயேச்சாதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்; இவர் பிரிடன் இஷ்டப்படி நடக்கமாட்டார்.

29—9—40.

ஜெர்மன் ஒலிபரப்புப்படி பார்த்தால் சமீபத்தில் ஜப்பானோடு செய்துகொண்ட உடன்படிக்கைப்படி, உலகத்திலேயே இனி, ஜெர்மனி, இதாலி, ஜப்பான் என்ற மூவரசுகள்தான் உண்டு; ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா கண்டங்கள், ஐரோப்பா, கீழ்-ஆசியா, இந்தியா, ரஷியாவென்ற நான்கு கண்டங்களாக மாற்றிப் பிரிக்கப்படும். இனி, ஆபிரிக்கா, அராபி-நாடுகள், பெர்ஸியாவெல்லாம் போய்விடும்.

ஜப்பான் உடன்படிக்கையால் ரஷியாவுக்கு ஒரு பாதகமும் ஏற்படாது என்றும், உடன்படிக்கையில் கண்டிருக்கும் 5-வது பிரிவுப்படி ரஷியாவுக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், இந்தியா சம்பந்தப்பட்டவரையில் ஒரு முடிவுக்கு வரவில்லையென்று ஜெர்மனி ஒலிபரப்புகிறது. இதிலிருந்து, ஜெர்மனி ஜயித்தால் இந்தியாவுக்கு வரப்போகும் விபத்தை இந்தியர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ஜெர்மனியாவது, ஜப்பானாவது, ஆக்ரமிக்கப் பார்த்தால் இந்தியா சும்மாவிடாது.

30—9—40.

ஜப்பானோடு செய்திருக்கும் ஒப்பந்தத்தை அமெரிக்கா (வாஷிங்டன்) அங்கீகரிப்பதாக இதாலியர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு மாறுதலாக, 'ஜப்பான்-உடன்படிக்கையைக் கேட்டவுடன் அமெரிக்கா திடுக்கிட்டுவிட்டது!' என்று ஸெப்டம்பர்-28-ஒலிபரப்பில் ஜெர்மனி சொல்லுகிறது.

ஜெர்மனிமேல் படையெடுத்த பிரிடிஷ்-விமானங்கள் இரண்டு சுடப்பட்டுக் கீழே விழுந்ததாகவும், அவைகளில் இருந்துபிடிக்கப்பட்ட விமானிகள் ஆஸ்திரேலியர்களாயிருந்தார்கள் என்றும், அதிலிருந்து பிரிடிஷ்-விமானிகள் குறைந்து விட்டதாக அனுமானிக்கவேண்டியிருக்கிறதென்றும் இதாலி-ரேடியோ சொல்லுகிறது. ஆஸ்திரேலியர்கள் மட்டுமல்ல, இன்னும், கானேடியர்கள், நியூ-சிலாண்டர்கள், தென்-ஆபிரிக்கர்கள், ஜெக்கியர்கள், போல்-தேசத்தார்கள், பிரெஞ்சுக்காரர்கள், பிரிடிஷ் கக்ஷியில் சேர்ந்துகொண்டு ஜெர்மனியின்மேலும், இதாலியின் மேலும் விமானப்போர் செய்கிறார்கள். இதெல்லாம் ஜெர்மனிக்கும் இதாலிக்கும் பிடிக்காத காரியம்தான்.

மாலுமிகள், இன்ஜின்-அடுப்பு-வேலைக்காரர்கள் (ஸ்டோகர்கள்), தந்தி அடிப்பவர்கள், கம்பியில்லா தந்தி (வயர்லெஸ்) அடிப்பவர்கள், ராயல் இந்திய கடற்படைக்கு சேர்க்கவரும் கவர்ன்மெண்டு கோஷ்டியார் சுற்றுப்பிரயாண அட்டவணை.

இடம்.	தேதி, கிழமை.	வரும் நேரம்.	புறப்படும் நேரம்.	குறிப்பு.
	நவம்பர் மீ—			
மங்களூர் ...	4 திங்கள்	மாலை	...	மங்களூரில் இரவில் தங்குவார்கள்.
,, ...	5 செவ்வாய்	...	...	மங்களூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	6 புதன்	...	09.35	ரயிலில் பிரயாணம்.
கண்ணனூர் ...	,,	12.35	...	கண்ணனூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	7 வியாழன்	...	12.55	கண்ணனூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்; அன்றே புறப்படுவார்கள்.
கள்ளிக் கோட்டை.	,,	15.00	...	கள்ளிக்கோட்டையில் அன்றிரவு தங்குவார்கள்.
,, ...	8 வெள்ளி	...	15.00	ஆட்கள் பொறுக்கிவிட்டு, புறப்படுவார்கள்.
எர்ணுக்குளம்...	9 சனி	10.00	...	எர்ணுக்குளத்தில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	10 ஞாயிறு	...	...	எர்ணுக்குளத்தில் தங்குவார்கள்.
,, ...	11 திங்கள்	...	10.00	கொல்லத்துக்குப் புறப்படுவார்கள்.
கொல்லம் ...	,,	15.00	...	கொல்லத்தில் இரவு தங்குவார்கள்.
,, ...	12 செவ்வாய்	...	...	கொல்லத்தில் ஆட்களைப் பொறுக்குவாகள்.
,, ...	13 புதன்	...	10.00	ரயிலில் பிரயாணம்.
சென்னப் பட்டணம்.	14 வியாழன்	07.00	...	சென்னப்பட்டணத்தில் தங்குவார்கள்.
,, ...	15 வெள்ளி	...	...	சென்னப்பட்டணத்தில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	16 சனி	...	08.00	ரயிலில் பிரயாணம்.
டில்லி	... 18 திங்கள்	09.00	...	டில்லியில் தங்கியிருப்பார்கள்.
,, ...	19 செவ்வாய்	...	08.00	ஜஜருக்குப் புறப்படுவார்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XV.

1940—				மணி.
அக்டோபர் 19,	சனிக்கிழமை	டவுன் ஹால்	மாலை	6.30
20,	ஞாயிற்றுக்கிழமை.	திருக்கோகர்ணம்	,,	5.30
		ஆதனக்கோட்டை	,,	5.30
		பூவரசகுடி	,,	5.30
21,	திங்கட்கிழமை	காலேஜ் (B) தமிழ்	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை	,,	10.25
		அரிமளம்	மாலை	5.30
22,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம்	காலை	10.25
		சேரி	மாலை	5.30
		குன்றண்டார்கோவில்	,,	5.30
		குடுமியாமலை	,,	5.30
		ராமச்சந்திரபுரம்	,,	5.30
23,	புதன்கிழமை	அன்னவாசல்	,,	5.30
		விராச்சிலை	,,	5.30
24,	வியாழக்கிழமை	கோனாபட்டு	,,	5.30
		பெருங்களூர்	,,	5.30
25,	வெள்ளிக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம்	காலை	10.00

பிரஸங்கம் XVI.

26,	சனிக்கிழமை	டவுன் ஹால்	மாலை	6.30
27,	ஞாயிற்றுக்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம்	காலை	10.25
		திருவப்பூர்	மாலை	5.30
		காரையூர்	,,	5.30
		மிதிலைப்பட்டி	,,	5.30
		புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
		கீரனூர்	,,	5.30
28,	திங்கட்கிழமை	காலேஜ் (B) தமிழ்	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை	,,	10.25
		குருவிக்கொண்டான்பட்டி.	மாலை	5.30
		பனையபட்டி	,,	5.30
		வேங்கடக்குளம்	,,	5.30
29,	செவ்வாய்க்கிழமை.	வேந்தம்பட்டி	,,	5.30
		ராயவரம்	,,	5.30
		கீழாநிலை	,,	5.30
		குழிபிரை	,,	5.30
		திருமயம்	,,	5.30
நவம்பர் 1,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம்	காலை	10.00

தேவை

(புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம்).

இதற்கு ஓடும் நிலைமையுள்ள
ஒரு பழைய மோட்டார்
சாஸீஸ் (Chassis) தேவை.

தேசாபிமானமுள்ள கனவான்கள்
யாராவது ஒருவர்
இதை நன்கொடையாகக்
கொடுத்து உதவினால்,
அதற்கு பாடி (**Body**) முதலிய துகட்டி
அதை நிலயத்தின்
சுற்றுப்பிரயாண அறிக்கை வண்டியாக
ஸமஸ்தானத்தில்
உபயோகப்படுத்தப்படும்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—19-10-40.